RECEIVED 20-1-1986 PERIODICALS DIVISION

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | தை 7 | ஜ. அவ் 9 | இதழ் 344
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 20-1-1986

## இனப்பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு

### பலருக்கு கசப்பாக இருக்கும் என்கிறர் ஜனதிபதி

[கொழும்பு]

''இனப்பிரச்னை தொடர்பாக அரசு எடுக்கவிருக்கும் முடிவு பலருக்கு கசப்பாக இருக்கும். எனக்கு இதைவிட வெறுமூார்க்கம் இல்லை'' என்று ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்றுமுன்தினம் கம்டஹா ரத்னவாலி பாலிகா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கூறினர்.

''நாடற்றவர் பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டதைப் போல், இனப்பிரச்னைக்கும் நிரந்தரதீர்வு காணப்படும். ஜனநாயக நாட்டில் சிறுபான்மை மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கவேண்டியது எமது கடமை. யார் எதிர்த்தாலும் நான் இனப்பிரச்னையைத் தீர்த்துவைப்பேன். எனதுமுடிவு சகல மக்களுக்கும் நியாயமாகவும், நீதியாகவும் இருக்குமென்று அவர் கூறினர். [ய-க]

# பாதுகாப்பு வலயம் வாபஸ் பெறுமாறுகோரி

# யாழ். செயலகம்முன் தொடர்ச்சியாக மறியல் போராட்டம்

## நாளை மறுதினம்முதல் காலை 8 - மாலை 4 வரை நடக்கும்

(கா. யோகநாதன்)

**யாழ். கோட்டை இராணுவ முகாமை அகற்றுமாறும் 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ்பெறுமாறும் கோரி யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்திற்கு (கச்சேரி) முன்பாக இம்மாதம் 22ம் திகதி புதன்கிழமை முதல் தொடர்ச்சியான மறியற் போராட்டம் நடத்த அன்னையர் முன்னணி நேற்றுத் தீர்மானித்துள்ளது.**

தினமும் இந்த மறியற் போராட்டம் காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை தொடர்ச்சியாக நடக்குமென்றும், கச்சேரி ஊழியர் எவரையும் உள்ளே செல்லவிடாமல் வாசலில் மறியற்போராட்டம் இடம்பெறும் என்றும் அன்னையர் முன்னணிச் செயலாளர் நிர்மலா பாலரத்தினம் தெரிவித்தார்.

அகிம்சை முறையில் இந்து மறியற் போராட்டம் நடைபெறுமென்றும், இப்போராட்

[5-ம் பக்கம் பார்க்க]

## ''சிறையில் இடமில்லை என்ற நிலை உருவாகவேண்டும்''

### -கு. நேசையா

(யாழ்ப்பாணம்)

''தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள அரசாங்க செயலகங்களை இயங்காமல் செய்வதற்கு அன்னையர் முன்னணி யாழ். கச்சேரியில் ஆரம்பிக்கும் மறியல் போராட்டம் முதல்படியாகும். படிப்படியாக இந்தப் போராட்டம் விஸ்தரிக்கப்படும் எதற்கும் அவசரப்படக்கூடாது''

பொதுமக்கள் கூட்டத்தில் உரையாற்றிய பேராசிரியர் கு. நேசையா மேற்கண்டவாறு கூறினர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## வாபஸ் பெறுமாறு பிரஜைகள்குழு கோருகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ். கோட்டையிலிருந்து இராணுவத்தினரை அகற்றுமாறும், 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ் பெறுமாறும் யாழ். பிரஜைகள் குழுவினர் கோரியுள்ளனர்.

திரு. எஸ். அருமைநாயகம் தலைமையில் நடந்த பிரஜைகள் குழுக் கூட்டத்தில் யாழ். இராணுவ முகாமைச்சுற்றி 1000 மீற்றர் பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்ததற்கு பலத்த ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. [க]

## ராணுவ முகாமை அகற்றுமாறு பொதுமக்கள் கூட்டம் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

யாழ் கோட்டை இராணுவ முகாமை அகற்றுமாறும், ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ்பெறுமாறும் அரசைக் கோரும் தீர்மானம் யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த பொதுமக்கள் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

'சற்றடே றிவியூ' ஆங்கில வார இதழ் காரியாலயத்தில் அதன் ஆசிரியர் திரு காமினி நவரத்தின தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பெண்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

அன்னையர் முன்னணி, அகதிகள் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள், பத்திக்கப்பட்ட

(5-ம் பக்கம் பார்க்க)

## ''யாழ். கோட்டை அருகில் மறியல் செய்யவேண்டும்''

[யாழ்ப்பாணம்]

''யாழ். கோட்டைக்கு அணிவகுத்துச்சென்று அங்கு அஹிம்சைமுறையில் மறியல் செய்யவேண்டும். அவர்கள் சுட்டுத்தள்ளட்டும். வீட்டுக்குள் இருக்கும்போதே சுடுபட்டுச்சாகும்நிலை வந்தபின்னர் கோட்டைக்குமுன்பாக நெஞ்

[5-ம் பக்கம் பார்க்க]

## தொழிற்சங்க கூட்டுக்குழு பலத்த ஆட்சேபம்

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாடு இராணுவ முகாம்களைச் சுற்றியுள்ள 1000 மீற்றர் பிரதேசம் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தியுள்ளதை வடபிரதேச தொழிற்சங்க கூட்டுக்குழு பலமாக ஆட்சேபித்து அதனை வாபஸ் பெறுமாறு கோரியுள்ளது.

இதற்கு எதிராக வெகுஜன ஸ்தாபனங்களையும் இணைத்து

(5-ம் பக்கம் பார்க்க)

## படகு மூழ்கடிப்பு

[கொழும்பு]

மட்டக்களப்பு காரைதீவுக்கருகே தீவிரவாதிகள் பயணம் செய்த படகொன்றை கடற்படையினர் மூழ்கடித்துவிட்டதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

எண்ணற்ற படப் பிரதிகளை
வண்ண ஓவியங்களாக வழங்கிவரும்
வீடியோ பிரசாத்தின்
இன்றைய புதிய வெளியீடுகள்:-

1. ஆண் பாவம் (V. G. P.)
   (பாண்டியன், ரேவதி)
2. கரிமேடு கரிவாயன் (தரமான பிரதி)
   (விஜயகாந்த்)
3. சுயரூபம் (தரமான பிரதி)
   (சத்தியராஜ், பானுசந்தர்)
4. சாதனை (தரமான பிரதி)
   (பிரபு, சிவாஜி)
5. மீண்டும் பராசக்தி (Original Thomson)
   (சிவகுமார், நளினி)

வீடியோ பிரசாத்,
232, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C 108)

## பெங்களூர் சம்பவம்: ஈ. தே. வி. மு. அறிவிப்பு

[கொழும்பு]

பெங்களூரில் நடந்த நகைக் கடைக் கொள்ளைக்கும் ஈழ தேசிய விடுதலை முன்னணியில் அங்கம்வகிக்கும் விடுதலைப்புலி

(5ம் பக்கம் பார்க்க)

## வீட்டில்கூட பாதுகாப்புஇல்லை; உடன் நடவடிக்கைவேண்டும்

[யாழ்ப்பாணம்]

''நாட்டின் சில இடங்களில் நடந்துமுடிந்தது இப்போது யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திருமலை எல்லாம் சரி; அனைப்பால் யாழ்ப்பாணத்திலும் நடக்கிறது'' என்று யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த பொதுமக்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்த பத்திரிகையாளர் திரு. காமினி நவரத்தின கூறினர்.

'சற்றடே றிவியூ' காரியாலயத்தில் நடந்த கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

''இன்று மக்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? எவ்விதத் தொடர்புமில்லாத முஸ்லிம்கள்கூடப் பலியாகியுள்ளார்கள். வீட்டில்கூட இப்போது பாதுகாப்பு இல்லை. வீட்டில் இருந்தால் வெளியில் கூப்பிட்டுச் சுடுவார்கள் ரோட்

(5-ம் பக்கம் பார்க்க)

## அதிகாலை முற்றுகையின் எதிரொலி

# இருதயபுரத்தில் 50 பேர்பலி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இருதயபுரத்தில் ஆயுதப்படையினருக்கும், [illegible] நடந்த நேரடி மோதலில் சுமார் 50 பேர் பலியாகியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

தீவிரவாதிகளின் முகாம் ஒன்றை தாக்குவதற்கு ஆயுதப் படையினர் சென்றபோது நடந்த எதிர்த் தாக்குதலில் ஒரு சப்-இன்ஸ்பெக்டரும், பொலிஸ் கான்ஸ்டபிளும் பலியானுர்கள்.

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஈச்சமோட்டை வீதியில் 3 பரப்பு காணியும், சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: விளம்பர இல:- C 283, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 283]

Bairaha Farms புறொயிலர் இறைச்சிக் குஞ்சுகள் 28ந்திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். (C 53)

மல்லாகம் சந்தியிலிருந்து காங்கேசன்துறை றோட்டில் சந்தியிலிருந்து 300 யார் தூரத்தில் வெற்றுக்காணி 25 பரப்பு விற்பனவுக்குள்ளது. தொழிற்சாலை அமைக்க உகந்தகாணி. பிரித்தும் கொடுக்கப்படும். விபரங்களுக்கு: ம. சிதம்பரநாதன், சட்டத்தாணி, தெல்லிப்பழையில் தொடர்பு கொள்ளவும். [C 290)

பச்சிலைப்பள்ளி
ப. நோ.கூ. சங்கம், பளை

### வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கத்தில் 4000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்குண்டு. கேள்விப் படிவங்கள்ரூபா 100/- மீளப்பெறும் வைப்பாகச் செலுத்தி சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் ஏற்கனவே செலுத்தியோர் இம்முறை செலுத்த வேண்டியதில்லை. வெற்றுச் சாக்குகளை சங்க அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விண்ணப்பங்கள் யாவும் 28-1-86 க்கு முன் முத்திரையிடப்பட்ட பதிவுத் தபால்மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி
ப. நோ. கூ. ச., பளை
17-1-86 (A 107

## மணப்பந்தல்

45 வயது உயர்வேளாளர் குல மணமகனுக்கு மணமகள் தேவை. மணமகள் 35 வயதுக்கு மேற்பட்டவராகவும் இருக்கலாம். சீதனம் வசதிக்கேற்ப கொடுக்கலாம். மணமகனின் மாத வருமானம் 3000/- ரூபிப்பு; முதலிய விபரங்கட்கு தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல. C 293, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 293)

### தேவை

தாவடிச் சந்தியில் உள்ள பல் வைத்திய நிலையத்துக்கு உதவியாளராக கல்விப் பொதுத் தராதரம் (சாதாரணம்)வரை படித்த 18 வயதுக்கு மேற்படாத ஒரு பெண் தேவை. இருப்பிடவசதி உண்டு. விரும்புவோர் தாவடி சந்திக்கருகாமையிலுள்ள டாக்டர் பாலசுப்பிரமணியம் அவர்களுடன் 19-01-86ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 24-01-86ம் திகதி வெள்ளிக்கிழமை வரை பிற்பகல் 2-00 மணிக்குமேல் தொடர்பு கொள்ளவும். மேலதிக விபரங்கள் நேரில். C 257

பச்சிலைப்பள்ளி
ப. நோ கூ. சங்கம்,
பளை.

### வாக்காளர் அட்டவணை 1985 டிசம்பர்

31-12-1985 உடன் முடிவுறுத்தப்பட்ட மேற்படி சங்கத்தின் வாக்காளர் அட்டவணை 18-1-86 தொடக்கம் சகல கிளைகளிலும், சங்க அலுவலகத்திலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. உறுப்பினர் எவரேனும் தமது பெயர் சேர்க்கப்படாதது குறித்து அல்லது வேறேதேனும் ஆட்சேபனை இருப்பின் அட்டவணை பார்வைக்கு வைக்கப்பட்ட தினத்தில் இருந்து 10 நாட்களுக்கிடையில் மேன்முறையீடு செய்யலாம் இத்தகைய மேன்முறையீடுகள் இயக்குநர் சபையால் முடிவு செய்யப்படும்.

பொதுமுகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி
ப. நோ. கூ. ச.,
(A 106) பளை.

## இன்றைய பலன்

மாதம் தை- 7 (20-1-1986)
நாள்: திங்கட்கிழமை
திதி- தசமி மு. இ வரை
நக்ஷத்திரம் கார்த்திகை பி. இ. வரை

மேடம்: மனதில் விரக்தி நிலை தென்படும். உடல் நலமும் பாதிக்கப்படலாம். கால் நடைகளினால்நஷ்டமேற்படும். பூமிப் பிணக்குகளின் மூலம் வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ள நேரிடலாம்.

இடபம்: தொழிற் துறையில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நண்பர்கள் மூலம் தொடர்புகள் ஏற்படும்.

மிதுனம்: பொருள் வரவு, உபசாரம், பொழுது போக்கு இவற்றுடன் உற்சாகமூட்டும் செய்தியும் கிடைக்கும்.

கடகம்: நீண்ட நாள் எதிர்பார்த்த நல்ல செய்திகள் இன்று கிடைக்கலாம். வணிகர்களுக்கு வியாபார விருத்தி உண்டு. புதிய[illegible] துறைகளில் முதலீடு செய்யவும் நேரும்.

சிங்கம்: மதிவழி நடப்பின் மற்றவர்கள் பெருமைப்படுமளவிற்கு முன்னேற்றம் உண்டு. அன்னை வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

கன்னி: புத்திரவழியால் புகழுண்டு. புதிய பாதையில் தடையேற்படும். குடும்பத்தில் பிணைப்புகள் இறுகும்.

துலாம்: கௌரவத்தைப் பாதிக்கக் கூடிய சம்பவங்கள் இடம்பெறும். ஆற்றல் சுணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். எதிலும் முன் யோசனை நன்று.

விருச்சிகம்: குடும்ப வாழ்க்கை இன்று சுமூகமாக இருக்கும். தூரத்து உறவினர் ஒருவரிடமிருந்து உதவிகள் கிடைக்கும். சிறப்பான தினம்.

தனுசு: குறை கேட்க நேரிடும். கடமையில் தடைகள் தோன்றும். எதிர்பாராத நஷ்டத்திற்கும் இடமுண்டு.

மகரம்: நீண்ட நாள் கனவு இன்று நனவாகும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைக்கலாம். குருவின் ஆசியும் உண்டு.

கும்பம்: கடமையாற்றும் இடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும். அறிஞர்கள் போற்றுவர், ஆதரவும் உண்டு.

மீனம்: அதிர்ஷ்ட தேவதையின் அருள் உங்களுக்குக் கிடைக்கலாம் செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவு தப்பாமல் உண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றி மரணித்த உடுவில் சுன்னாகத்தைச் சேர்ந்த சிவகணேசமூர்த்தி பெண் தனலட்சுமியின் மரணச்சொத்து சம்பந்தப்பட்ட விடயத்தில்

(மரணித்தவர்)

மரணச்சொத்து]
தத்துவ வழக்கு] இல. ரி/3895

பொன்னையா சிவகணேசமூர்த்தி, உடுவில். சுன்னாகம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனமில்லாத் தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 9ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

காலம் 07-02-1986 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக்கட்டளைப்படி
கனகேந்திரன்,
பதிவாளருக்காக.

வரைவு:
சி. வசந்தசேனன்,
சட்டத்தரணி,
1-11-85.
[2238]

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
சி. அரசரத்தினம்
[அரஸ்கோ]



அன்னையின் மடியில்: 26-09-1917
ஆண்டவன் அடியில்: 20-01-1985
திதி: 08-02-1986

வாச மலர்க்கொத்தே
வாடி வதங்கிவிட்டால்,
நேசமிடும் வண்டுகள்
நாம் என்செய்வோம்?
நிழல்தரும் மரமே
பாறிச் சரிந்துவிட்டால்,
நிழலை எங்குதேட
நிம்மதியை எங்குநாட?

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

'கந்தன் அருள்'
54, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C 286)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## ஹோம் பிஞன்ஸ் லிமிட்.,

புதிய மோஸ்தர் துல்ஹிரிய புடைவைகள்
சிறிய தொகை வந்துள்ளது என்பதை
எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்,
82, கன்னதிட்டி றேட், யாழ்ப்பாணம்.
(A46)

உ
ஸ்ரீராம ஜெயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான தமிழ் குரோதன ஹூ
தை மாதம் 9ந்திகதி (22-1-86) புதன்கிழமை
காலை 8-05 மணி முதல் 9-15 மணி வரையுள்ள சுபமுகூர்த்தவேளையில்

எனது மகன்
திருநிறை செல்வன்
நித்தியானந்தன்
அவர்களுக்கும்

எமது மகள்
திருநிறை செல்வி
சாவித்திரி
அவர்களுக்கும்

மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு குடும்பசமேதராய் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
அத்துடன் பகல் போசன விருந்திலும் பங்குபற்றுமாறு பணிவுடன் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி பூபதி குமாரசாமி,
8/2, பெருமாள் கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி நாகேந்திரம்
சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பு.
[illegible]

## ஓர் உருக்கமான வேண்டுகோள்

யாழ்ப்பாணம் இலங்கை வங்கியிலிருந்து இளைப்பாறிய வட்டுக்கோட்டை கிழக்கு திரு. மருதமுத்து மகேசனை 09-01-86 அதிகாலை 5-45 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் ஒரு மோட்டார் வாகனத்தில் கடத்திச் சென்றனர்.

இவர் இருதயநோய், வாதநோய், மூலநோயினாலும் பீடிக்கப்பட்டு இளைப்பாறி தனது இல்லத்திலே தனது கருமங்களையே பார்க்கமுடியாத தேகநிலையிலுள்ளவர். இந்த உண்மையான நிலையை உணர்ந்து கருணை கூர்ந்து மனிதாபிமானத்துடன் இவரை இவரது இல்லத்தில் எதுவித நிபந்தனையும் இன்றிக் கொண்டு வந்து விடுமாறு வேண்டுகிறோம்.

நாங்கள் எல்லோரும் இவரதுவிடுதலைக்குக்கடவுளை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், சுற்றத்தார்,
வட்டுக்கோட்டை.
சித்தங்கேணி மக்கள்.
C 233

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவாட்டாமலாவில் விமான விபத்து: 88 பேர் மரணம்

உலகச் செய்திகள்

**குவாட்டமலா, ஜன. 19**

**குவாட்டமலாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமான விபத்தொன்றில் எட்டு விமான சிப்பந்திகள் உட்பட மொத்தம் 88 பேர் பலியானார்கள்.**

இந்த வருடத்தில் இடம்பெற்றுள்ள முதலாவது பெரிய விமானவிபத்து இதுவாகும்.

குவாட்டமலாவின் வடக்கு மாகாணமான புலோரிஸ்ஸிலுள்ள சாண்டா எளினா என்னும் விமான நிலையத்திற்கு அருகில் இந்த விபத்து நடந்துள்ளது.

தனியார் கம்பெனி ஒன்றுக்கு சொந்தமான இந்த விமானம் குவாட்டமலாவுக்கும், சாண்டாஎளினாவுக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டிருந்த பொழுது ஏற்பட்ட இயந்திரக் கோளாரே விபத்துக்கு காரணமென்றுக்கு கூறப்படுகிறது.

விபத்தில் பலியானவர்களில் வெனிசுலாவின் முன்னாள் வெளியுறவுஅமைச்சர் அடிஸ்ட்டேஸ் அல்வானியும் ஆவார். மீட்பு வேலைகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்பட்டது. (ரா)

# இந்திய குடியரசு தினத்தையிட்டு பாதுகாப்பு நடவடிக்கை தீவிரம்

(புதுடில்லி)

இந்தியாவில் அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் குடியரசுத் தினத்தன்று சீக்கிய தீவிரவாதிகள் தாக்குதலை நடத்தவுள்ளார்கள் என்று வெளியான செய்தியையடுத்து அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

குடியரசுக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளவிருக்கும் இந்சியப்பிரதமர் திரு ராஜீவ் காந்திக்கும் ஏனைய அமைச்சர்களுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

சுமார் 300க்கு மேற்பட்ட கத்திகள், வாள்கள், சீக்கியருக்கு உரித்தான கத்திகள் உட்பட பெருந்தொகையான ஆயுதங்களை ரிக்ஷோ ஒன்றில் ஏற்றிச்சென்ற இரு சீக்கியர்கள் பழைய டில்லியில் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதையடுத்து இப்பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன. (ச)

# தெ.யேமனில் வெளிநாட்டவர் வெளியேற்றம் இடைநிறுத்தம்

ஏடன், ஜன. 19

தெற்கு யேமனிலிருந்து வெளிநாட்டவர்களை கடல் மார்க்கமாக வெளியேற்றும் வேலைகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தெற்கு யேமனில் அரசுப் படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்குமிடையில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் தீவிர சண்டைகள் ஏடன் துறைமுகப் பகுதிக்கும் பரவியதைத் தொடர்ந்தே இந்த இடைநிறுத்தம். அமுல் படுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்திற்கு முன்பதாக பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 1600 பேர் சோவியத், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளுக்குச் சொந்தமான கப்பல்களில் ஏடனைவிட்டு ஏற்கனவேவெளியேறிவிட்டதாக கூறப்படுகிறது.

இதற்கிடையில் மேலும் நூற்றுக்கு அதிகமானவர்களை ஏற்றிச்செல்வதற்காக ஏடன் துறைமுகத்துக்குச் சென்ற பிரிட்டனுக்கு சொந்தமான ''ரோயல் பிரிட்டிஷ்'' என்னும் படகு பலத்ததாக்குதலுக்கு உள்ளாகியமையினால், வெளிநாட்டவர்களை ஏற்றுமலேயே திரும்பிவிட்டதாக கூறப்பட்டது. (ரா)

## 'முரசொலி' ஒய்ந்தது!!

[சென்னை]

திராவிடமுன்னேற்றக் கழகத்தின் பிரசார ஏடான ''முரசொலி'' தனது வெளியீட்டை பொங்கலுடன் நிறுத்திக் கொண்டது.

சுமார் 50வருடங்களாக தமிழக மக்களின் அபிமானத்துக்குரிய இப்பத்திரிகை பொருளாதார நெருக்கடியிலும் பத்திரிகைத்தாள் விலையேற்றத்திலும் நிறுத்தப்பட்டுவிட்டதாக கலைஞர் மு. கருணாநிதி தமது உடன்பிறப்புக்கான கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கையெழுத்துப் பத்திரிகையாக இருந்து அச்சுவாகனம் ஏறியது குறிப்பிடத்தக்கது. [செ]

## ரொமேஷ் பாக். விஜயம்

(இஸ்லாமாபாத்)

இந்திய வெளியுறவு செயலா திரு. ரொமேஷ்பண்டாரி நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு இஸ்லாமாபாத் வந்துசேர்ந்தார்.

சமாதான உடன்படிக்கை மற்றும் போர் தவிர்த்தல் உடன்படிக்கைக்கானயோசனைகள் தொடர்பாக பாகிஸ்தான் அரசுடன் திரு பண்டாரி பேச்சுநடத்துவார்.

ஆக்கபூர்வமான யோசனைகளுடன்தான் வந்திருப்பதாக இஸ்லாமாபாத் விமான நிலையத்தில் வந்திறங்கிய பொழுது திரு ரொமேஷ்பண்டாரி செய்தியாளர்களிடம்தெரிவித்தார்

போர் தவிர்த்தல் உடன்படிக்கை அல்லது சமாதான உடன்படிக்கைசெய்துகொள்வதோடு நின்றுவிடாமல் பரஸ்பரம் நம்பிக்கை மற்றும் இருதரப்பு உறவுகளை விரிவாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என்றும்அவர் மேலும் தெரிவித்தார். (து)

# இலங்கைத் தமிழர்களை: இந்தியாவும் உலகநாடுகளும் காப்பாற்ற வேண்டும்

## 'புலிகள்' இயக்கம் வேண்டுகோள்

(சென்னை)

''இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் திட்டமிட்ட வன்முறைகளையும், இனபடுகொலைகளையும் தடுத்து நிறுத்த இந்திய அரசும், உலகில் நாகரீகமடைந்துள்ள நாடுகளும் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்'' என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இந்திய அரசுக்கும், உலக நாடுகளுக்கும் வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளது.

சென்னையில் நேற்று முன்தினம் மேற்படி அமைப்பு விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- ''யாழ்ப்பாணப் பகுதியில் பெரிய தாக்குதல் ஒன்றை நடத்த இலங்கை இராணுவம் தயார் நிலையில் இருப்பதுடன், வடமாகாண தமிழர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்த போர் ஆயத்த நிலையில் உள்ளது. இதற்கு தகுந்த சான்றுகள் எம்மிடம் உள்ளன.

''போர் நிறுத்த உடன்பாட்டை தமிழ் போராளிகள் மீறிவிட்டனர் என்று இலங்கை அரசு எம் மீது குற்றம் சுமத்துகிறது. இதில் எவ்வித உண்மையும் இல்லை. இதேவேளை போர் நிறுத்தம் என்ற பெயரில் வடபகுதியில் பெருமளவிலான ஆயுதங்களை குவிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. ஒன்றுமறியாத அப்பாவி மக்களையும் தம்மையும் இராணுவ படுகொலைகளிலிருந்து காப்பாற்றவே கெரில்லா நடவடிக்கைகளில் தாம் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## பொரளை சம்பவம் செம்படை உரிமை கோருகிறது

(யாழ்ப்பாணம்)

பொரளையில் இடம்பெற்ற குண்டு தாக்குதல் சம்பந்தமாக செம்படைக் கெரில்லாக்கள் உரிமை கோரியுள்ளனர்.

இது சம்பந்தமாக வெளியிட்ட அறிக்கையில்; தமிழீழ செம்படையைச் சேர்ந்த செம்படைக் கெரில்லாக்களால் 16ம் திகதி கொழும்பு பொரளையில் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சிறீலங்கா அரசினால் எமது தமிழீழ தாயகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பதிலடி கொடுக்கு முகமாகவும் எச்சரிக்கை செய்யுமாகவும் [illegible] மேற்கொண்டோம்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாதுகாப்பு வலயம்: யாழ். வர்த்தகர்கள் எதிர்ப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை இராணுவ முகாமைச் சுற்றியுள்ள பகுதியில் 1000 மீட்டர் பகுதியை பாதுகாப்பு பிரதேசமாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளதை யாழ். வர்த்தகசங்கம் பலமாக ஆட்சேபித்துள்ளது.

யாழ். வர்த்தக சங்கத்தின் செயற்குழு கூட்டம் நேற்று முன்தினம் நடந்தபோது பதவியை ராஜினமா செய்தவர்த்தகசங்கத்தலைவர் திரு. எஸ். வி. முருகேசு, செயற்குழு வினரின் வற்புறுத்தலின் பேரில், ராஜினமாவை வாபஸ்பெற்றுக்கொண்டார்.

யாழ். பெரியகடைப் பகுதியில் உள்ள சுமார் 5000 வர்த்தகர்களும், சிப்பந்திகளும், இந்த 1000 மீட்டர் பாதுகாப்பு பிரதேசத்தினால் கடுமையாக பாதிக்கப்படுவார்கள்என்றும் இதனை கடுமையாக எதிர்க்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இன்று திங்கட்கிழமை காலை யாழ் வர்த்தக சங்கத்தினரின் எதிர்ப்பைமகஜர் மூலம் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் ஊடாக மேலிடத்திற்கு அனுப்பி வைப்பதென்றும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

உடன் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் திகதி குறிப்பிட்டு வர்த்தகர்களின் கடும் எதிர்ப்பைத் தெரிவிப்பதென்றும் முடிவு செய்யப்பபட்டது. (க)

# 'கோரிக்கை நிறைவேறுவிடில் தொடர்ந்துமறியல்போராட்டம்

(யாழ்ப்பாணம்)

''யாழ். கஸ்தூரியார் வீதி இராசேந்திரா ஒழுங்கையில் இருக்கும் நகைத்தொழிற்சாலையில் நடந்த கொள்ளையினால் ஏற்பட்ட இழப்புகளை நிவிர்த்திசெய்து இனிமேல் இப்படிப்பட்ட தீய செயல் நடைபெறுதபடி, ஏழைத் தொழிலாளரின் இன்னல்களை களைந்து வாழவழிசெய்யும்படி குறிப்பாக புனித இயக்கங்கள் அனைத்தையும் வேண்டிக் கொள்கிறோம்''

யாழ். நகைத்தொழிலாளர் கூட்டத்தில் தெரிவான 12பேர் அடங்கிய குழுவினர் நேற்று வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். அந்தவேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது.

15-ம் தேதி அன்று நடத்திய ஒரு நாள் அடையாள மறியல் போராட்டத்திற்கும் வழிமறிப்புப் போராட்டத்திற்கும் ஒத்துழைப்பு தந்த, சகல நகைக்கடை உரிமையாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். ஏழைத்தொழிலாளர்களாகிய எமக்கு கொள்ளைபோன பொருட்கள் அனைத்தையும் கருணைகூர்ந்து மீட்டுத்தரும் வண்ணம் புனித இயக்கங்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். எமது கோரிக்கை நிறைவேறுத பட்சத்தில் மீண்டும் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுகூடி கதவடைப்பு மறியல்போராட்டமும் தொடர்ந்தும் நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதை மிகவும் வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். (க)

## அரங்கநாயகம் காலமானார்

சென்னை. ஜன. 19

தமிழ்நாடு சட்டசபை முன்னாள் உறுப்பினரும், தி. மு. க. கோவை மாவட்ட முன்னாள் அமைப்பாளருமான திரு கே. அரங்கநாயகம் நேற்று முன்தினம் கோயம்புத்தூரில் காலமானார். இவருக்கு வயது 55

## இந்தியாவும் பாகிஸ்தானும் உறுதி

இஸ்லமாபாத் ஜன: 19

''இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்று மற்றதின் அணு நிலையங்களை தாக்கிக் கொள்வதில்லை'' என்று உறுதிக் கொண்ட உடன்பாடு ஒன்றினை இரு நாடுகளும் நேற்று பரிமாறிக் கொண்டன.

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியும், பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் ஜனுப் நியாஸும் இந்த இருதரப்பு பரிமாற்றத்தில் கலந்து கொண்டனர். (ரர)

## சோவியத் யூனியன் வேண்டுகோள்

(மாஸ்கோ

''இந்தநூற்றுண்டு முடிவதற்குள் அனைத்து அணு ஆயுதங்களையும் முற்றாக ஒழித்து விடுதல் என்ற தமது புதிய சமாதான திட்டத்துக்கு அமெரிக்காவும், அதன் நேச நாடுகளும் சாதகமான முறையில் நடந்துகொள்ள வேண்டும்'' என்று சோவியத் யூனியன் வேண்டுகோள் விடுத்துள்ளது

இது குறித்து மேலை நாடுகளின் சாதகமான பதில் அணு ஆயுத அச்சுறுத்தல்களை நிரந்தரமாக அகற்றிவிட உதவும் என்றும் சோவியத் யூனியன் தெரிவித்துள்ளது. (ரா)

## இடம் மாறுகின்றன

(புலோலி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை புலோலியில் யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை புலோலி பொதுசன நூலகத்திற்கு அருகாமையில் உள்ள புலோலி கமநலச்சேவை நிலையக் கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபைப் பொதுசன சந்தை, டாக்டர் முருகானந்தனின் வைத்திய சாலைக்கு முன்புறமாகவுள்ள மைதானத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது இதற்கான தற்காலிகக் கொட்டில்களும் அமைக்கப்பட்டுள்ளன. பருத்தித்துறையில் தொடர்ந்தும் பதற்றமே நிலவி வருகின்றது. பருத்தித்துறை நகர் வெறிச் சோடியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

அமைதியுடனும், திடமாகவும், புகழ்ச்சிக்கும், இகழ்ச்சிக்கும் செவிகொடாமல் வேலைசெய்யும் பக்தனே உண்மையில் அனைவரிலும் மேலானவன்.

—ராமகிருஷ்ணர்.

# நமது நோக்கு

## 'அந்த ஆயிரம் மீற்றர் அபாயம்'

அமெரிக்க ஜனாதிபதி றீகன் லிபிய ஜனாதிபதியுடன் கிடாவிச்கொண்டது ஆனைக்கும் பூனைக்கும் உண்டான பிணக்குப்போல் தோன்றும்.

இரண்டும் வெவ்வேறு நாடுகள் என்பதும், அந்நாடுகளின் தலைவர்கள் இருவரும் தத்தம் மக்களின் தலைவர்கள் என்பதும் சுதந்திர உலகில் வேறுபாடின்றி மதிக்கப்பட வேண்டியது.

அந்த உரிமை அவ்வாறுக லிபிய அதிபர் கேணல் கடாபி எதற்கும் அஞ்சாத் துணிச்சல் வீரன் என்று கருதப்படுகிறது. எதற்கும்அஞ்சாத என்னும்போது, எந்தச் சட்டத்தையும் மீறும் Outlaw - விடுகாலி என்று றீகன் வர்ணிக்கிறார்.

மத்திய கிழக்கில் உருவாகும் பயங்கரவாதமே அங்கு அமைதிக்கு சத்துருவாகஉள்ளது: அதனை உற்பத்திசெய்வது பீ எல் ஓ என்பது றீகனின் வாதம்; அதற்கு உறுதுணையாக விருந்து பயிற்சி அளிப்பது லிபியா என்ற நம்பிக்கையில்; ரோம், வியன்னா விமான நிலையங்களில் கடந்தமாதம் நடந்த தாக்குதல், லிபிய அதிபரின் பாதுகாப்பிலுள்ள பயங்கரவாதிகளின் கொடுமையென்று ஜனாதிபதி றீகன் வர்ணித்திருக்கின்றார்.

இதற்கு கடும் ஆட்சேபம் தெரிவித்துவரும் லிபிய அதிபர் கடாபி மத்திய தரைக்கடலில் அமெரிக்க தளங்கள் முற்றாக அழிக்கப்படும் என்ற அச்சுறுத்தலைப் பிரகடனப்படுத்தியிருக்கின்றார்.

பயங்கரவாதம் எங்கு உண்டோ அதனைத் தேடி அழிப்பது அமெரிக்காவின் இன்றைய கடமை என்று அமெரிக்க உப ஜனாதிபதி ஷுல்ஸ் வற்புறுத்தியிருக்கிறார். எனவே லிபியா அந்தமுறைக்கு அளிக்கும் பயிற்சியும் ஊக்கமும், அமெரிக்காவின் பெரும் தாக்குதலுக்கு தூபமிடும் என்பது தெளிவு.

அதனை எள்ளளவும் பொருட்படுத்தாத லிபிய அதிபர், பீஎல்ஓவிற்கு உரிய உறைவிடம் கிட்டாத நிலையில் மத்தியகிழக்கில் 'பயங்கரவாதம்' முடிவடையாதென்று கொள்கின்றார்.

பயங்கரவாதம், தியாகம் போன்று இருவகைப்பட்டது என்று கொள்ளப்படுகிறது. அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வென்பேகர் இந்த வேறுபாட்டை நுட்பமாகவிளக்கியுள்ளார். ''அழித்தொழி'', எதுவானாலும், என்னதான் விளைவானாலும் அழிப்பதே முக்கியம் என்று கொள்வதுஒருவிதம்; குறிப்பிட்ட நோக்குடன் மக்கள்- விடுதலைக்காக, எதிரியைஒழிப்பதற்காக பொது மக்களை அழிக்கும் திட்டம் தவிர்ந்த பயங்கரதாக்குதல் இன்னொருவிதம்.

லிபியாவின் பயங்கரவாதம் எதனைச் சேர்ந்தது? அமெரிக்காவின் பயங்கர ஒழிப்புத்திட்டம், இந்த இரண்டில் எதனைச் சேர்ந்தது?

இவ்வித விளுக்களை எழுப்பும் அபாயநிலை எங்கள் நாட்டில் உருவாகிறது. தமிழர் விடுதலைக்குப் போராடும் தமிழ் இளைஞர்கள் இதனைக் கருத்திற் கோள்க.

லிபிய அதிபர் கடாபி ஜனாதிபதி ஹிட்லரை 'இரண்டாவது ஹிட்லர்' என்று சொல்கிறார்.

இதனைக் கேட்டவர்கள் மூன்றும் உலகயுத்தம் ஒன்றை நினைத்து நிச்சயம் நடுங்குவார்கள்,

அது மட்டுமல்ல இரண்டாம் உலகயுத்த முடிவில் அதற்குப் பொறுப்பான ஹிட்லர், வெற்றியடைந்தவர் கையில் அகப்படவில்லை.

போரின் கொடுமைக்குக் காரணமான தலைவர்கள் மியூனிச்சில் விசாரணை செய்யப்பட்டதும், ஹிட்லரின் பிரதம உதவியாளர் 'ஹேர்ஹெஸ்' மரணபரியந்தம் சிறைவைக்கப்பட்டதும் நினைவுக்கு வருகிறது.

தமது தொண்ணூற்றுச் சொச்ச வயதிலும், இங்கிலாந்தில் 'ஹேர்ஹெஸ்' இன்றும் சிறையிருப்பதை பலர் அறியார்.

இன்னொரு உலகப்போர் உருவாக மாட்டாதென்று வல்லரசுகள் இரண்டும் வாக்குறுதியளித்த போதும் உலகெங்கிலும் போர்க் கோலம் காணப்படுகிறது.

இந்தக் கோலமே எங்கள் சிறுநாட்டைப் பீடித்திருக்கிறது.

எங்கு தொடங்கி எங்கு முடிக்கலாம் என்ற சந்தேகம் பாதுகாப்பு அமைச்சர் லலித்துக்கு உண்டு. போரை மட்டுமல்ல, சமாதான பேச்சுவார்த்தைகள்கூட.

யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழ் மக்கள் 'போர்' இங்குதான்முடிவுறும் என்று அஞ்சுகின்றனர்.

இந்தப் போரில் பிரகடனப்படுத்தப்பட்ட 'ஆயிரம் மீற்றர் பாதுகாப்புப் பிரதேசம்' ராணுவத்துக்குரியது. இது தொண்டமானாற்றில் உண்டான போர்க்கால நிலையில் பரீட்சிக்கப்படுகிறது.

ராணுவத் தளபதிகளின் சிந்தனையில் மட்டும் உருவான சில தீர்மானங்கள் நாட்டை அழித்துவிடுவது வரலாற்றின் படிப்பினை. அரசியல் தலைவர்களின் தீர்க்கமான ஆலோசனை இவ்வித அழிவைத் தடுக்க வல்லது.

எங்கள் நேற்றைய பத்திரிகையில் யாழ் கோட்டையின் ஆயிரம் மீற்றர் எல்லை மிக தெளிவாக ஊறு தி போல் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

யாழ். நகரமே அழிவுக்குள்ளாகும் என்ற அச்சம் மக்களுக்கு உண்டு; கடந்த கால அனுபவம் இதற்குச் சான்று.

நகரத்தையோ ... டையோ அழிக்க தமிழ்போராளிகளோ அரச ராணுவமோ உடந்தையாக விருக்கப்படாது. போரை நிறுத்த, போர் நிறுத்தம் பலம்பெற உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இன்றேல் வடக்குத் தெற்கு என்ற பிரிவினை நிரந்தரமாகும்.

---

**உலக அரசியல் அரங்கு** — அரசியல் அவதானி

# அரசியலில் தலைமைதாங்க, தலைமைபேண

# அவஸ்தைப்படும் நான்கு பெண்மணிகள்

மென்மையும் பொறுமையும் வாய்ந்த கண்ணகி போல் வன்மை வடிவத்தில் இன்றைய ஆட்சியைக்குலைத்து அரியாசனம் ஏறமுயலுகின்றவர்கள்மூவர், பிரதமர் பதவியைத் துறக்க நேரிடுமோஎன்றுஏக்கமுடையவர் மற்றவர்.

## பிலிப்பைன்ஸ்

வருகிறமாதம் நடக்கவிருக்கும் ஜனாதிபதித்தேர்தலில் மார்க்கோஸை எதிர்த்துப் போட்டியிடுபவர்; திருமதி கொறசின் அக்கியூனோ. எதிர்க் கட்சித்தலைவராக இருந்த தம் கணவர் கொல்லப்பட்டதையும், அக்கொலைவழக்கில் நியாயம் வழங்காததையுமிட்டும் இன்று நாட்டைக்கெடுத்து வரும் நீண்டகாலக் கொடுங்கோலை முடிவுகட்டவுமே இத் தேர்தலில் இறங்கியிருகிறார்.

மாறுபட்டோரை ஒறுக்கும் திறம் பெண்களிடம் உண்டென்பது இன்று உலகில் பிரபலம்பெற்ற நான்கு பெண்மணிகளின் செயல்களில்காணப்படுகின்றது - திருமதி அக்கியூனோ, பெனுசிர் பூட்டோ, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க, பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரெட் தட்சர்.

பிலிப்பைன்ஸ் தேர்தல் பிரசாரத்தில் மார்க்கோஸ் மனைவி இமெல்டா முக்கிய பங்கெடுத்திருக்கிறார். பெண் ஒருத்திபேசில் பெரும் பூமிதானதிரும் எனவே இருவர் என்றால்எவ்வாறிருக்கும்? கொலைக்குக்கொலை என்ற பழிவாங்குதல் இப்பிரசாரத்தில் நிறைந்திருக்கிறது.

பிரசாரக் கூட்டத்துக்குப் புறப்பட்ட மார்க்கோஸ் குடும்பத்தினரை ஏற்றிச்செல்வதற்கு அழைக்கப்பட்ட விசேட விமானத்தின் பைலட் இனந்தெரியாதவரால் சுடப்பட்டார். அவருடைய பாக்கெட்டில் இருந்த தபாலுறையிலே திருமதி மார்க்கோஸ் அமைத்த கூட்டத்தின் நிகழ்ச்சிநிரல் களவாடப்பட்டது.

அதேசமயம் திருமதி அக்கியூனோவின் தேர்தல் பிரசார உதவியாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். எதிர்க் கட்சிக்கு நடந்த தீமை இது.

''இந்த இரத்தம் சிந்தலை முடிவுக்குக் கொண்டுவந்தேயாகவேண்டும்'' என்று சொல்லிவரும் திருமதி அக்கியூனோ, தான் வெற்றிபெற்றால் கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளருடன் யுத்தநிறுத்தம் செய்து நாட்டை'நோர்மல்' நிலைக்குக் கொண்டுவருவதாக உறுதியளித்துவருகிறார்.

ஒரு பெண் தன் புருஷனை இழந்தநிலை இகழ்ச்சிநிலை; இகழ்ச்சிக்குரித்தான பெண் பேயிலும் பார்க்க பயங்கரமான பிறவிஎன்கிறார் ஷேகஸ்பியர்.

## பாகிஸ்தான்

மணிலாவிலிருந்து பாகிஸ்தானுக்குவந்தால்அங்கு ஜனாதிபதி ஷியாவுக்குச் சவால்விடும் பெனுசிர் பூட்டோ விவகாரம் தெளிவுறும் மார்ஷல்-லோ ஆட்சிநடத்திய ஷியா அதனைத் தளர்த்தி சிவில் ஆட்சிக்கு நாட்டைத் திருப்பியுள்ளார். இச் சிவில் ஆட்சி வெறும் பேச்சில் தான்காணப்படுவதாக எதிர்க் கட்சிகள் முழங்குகின்றன. எட்டரைவருட இராணுவ ஆட்சியில் நாடு பொருளாதாரத்தில் முன்னேற்றங்கண்டது என்று பிரசாரம் நடைபெறுகிறது.

இருப்பினும் இவ்விருண்ட மார்ஷல்-லோ ஆட்சிநீங்கியது ஒருபெரும் நன்மை; புதிய சிவிலியன் ஆட்சியில் பாராளுமன்ற ஆட்சி, மனித அடிப்படை உரிமைகள், எதிர்க் கட்சிகள் புத்துயிர்பெறுவதற்கு அதிகஇடமில்லை படைத் தலைவர், ஜெனரல் ஷியாவாக இருக்கும்போது எந்தக்குழப்பத்திலும்,இராணுவத்தலையீடு இருக்கவேசெய்யும்.

இன்னொருதடவை ஜனாதிபதியாக தம்மை ஆக்கிக் கொண்ட ஷியா, சுதந்திர தேர்தலில் தம்மை எதிர்க்கும் மக்கள்கட்சிக்கும் அதன்தலைவியான பெனுசிர் பூட்டோவிற்கும்போட்டியிடும் சந்தர்ப்பம் அளிக்கமாட்டார்,

ஜனாதிபதி பூட்டோவின் கொலை நியாயமானதென்று கொண்டாலும், அது அரசியற் கொலையே. அதனை எதிர்த்துஉருவான கட்சியே பாகிஸ்தான் மக்கள்கட்சி, (பிபிபி) அதுபெரும் பலம்பெற்றகட்சி; அதற்குத்தலைமைதாங்கும் பெனுசிர் பூட்டோ சிறையிலிட்டு நாடுகடத்தப்பட்டு பல வகையிலும் தண்டிக்கப்பட்டவர். பூட்டோ குடும்பத்தின் துன்பங்கள் அனைத்தும் இப் பெண்மணியில் உக்கிரவேடம் எடுத்திருக்கிறது. 'நீயோ அரசன்'', ''நீயே கள்வன்'' என்ற அரசியற்கற்பு வெற்றி காண சந்தர்ப்பம் கிடைக்குமா?

## இலங்கை

உலகின் முதற் பெண் பிரதமர் என்ற பெருமை பெற்வர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க. 1956ல் ஒருவித புரட்சிகரமான தேர்தலில் வெற்றி பெற்ற எதிர்க்கட்சித் தலைவர் எஸ். டபிள்யூ ஆர். டி. பிரதமராக ஆட்சிபுரிந்த போது அரசியல் கொலைக்கு ஆளானார். அதனையடுத்து பிரதமராக வந்த அவருடைய மனைவியார் சுமார் 13 வருடங்கள் இரண்டுதடவை ஸ்ரீலங்கா கட்சியின் தலைவியாக ஆட்சி புரிந்தார்.

கணவன் உயர் கொலைக் காளானதென்றால், மனைவி 1977ல் நடந்த பொதுத்தேர்தலில் தோல்வியுற்றார். அதனையடுத்து கொடுங்கோல் ஆட்சி புரிந்தார் என்ற குற்றங்கண்டு அரசியல் உரிமை என்ற துகிலுரியப்பட்டார். குடியுரிமை இழந்த நிலையிலும் நாட்டின் விவகாரங்களில் அக்கறையுடனிருந்த சிறிமாவோவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு அளித்துள்ளார். மீண்டும் அரசியலில் தீவிர பங்குகொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இன்று நாட்டைப் பீடித்திருக்கும் பல கொடுமைகளில் மிகப் பெரிய கொடுமை தமிழர் பிரச்னை என்று கருதும் சிறிமாவோ, அதனைத் தம்மால் தீர்த்து வைக்க முடியும்; அது அரசியல் தீர்வே. அது பொதுத் தேர்தல் மூலமே ஆகும் என்ற கருத்தைப் பிரசாரம் செய்து வருகிறார்.

மஅரசியல்திண்மை சிறிமாவோவிடம் அதிகம் உண்டு. கணவனை இழந்த நிலையில் கண்ணகியைப்போல் அவரின் தயக்கமற்றதலைமையைக் கண்டு ஐ தே ஆட்சி திடுக்குற்றது.

அரசியல் உரிமை இழந்த நிலையிலும் அவருடைய அரசியல் செல்வாக்கு அருகவில்லை. குடும்பத்தில் பிளவு. கட்சியில் பிளவு. மக்கள்மத்தியில்பிளவு, இவையெல்லாம் இன்றைய ஜனாதிபதியின் திருவிளையாடல்கள் என்று கருதும் சிறிமாவோ; தாம் ஆட்சிக்கு வருவது நிச்சயம். வந்ததும் ஒரு வாரத்தில் தமிழர் பிரச்னையை தீர்த்து வைக்கவும் தமிழ் இளைஞர்களை அமைதிப்படுத்தவும் தம்மால் முடியுமென்று சங்கணம் கட்டுகிறார்.

## பிரிட்டன்

மேற்கில் குறிப்பாக பிரிட்டனில் முதற் பெண் பிரதமரான திருமதி மார்கிரெட் தட்சரின் விவகாரம் சற்று வேறுபட்டது. எவ்வித அரசியற் கொலைப் பிரச்னையால் ஆட்சித்தலைமைக்கு வந்தவரல்ல. திருமதி தட்சர் உழைப்பால் இப்பெரும் பதவிக்கு உயர்ந்தவர். உறுதியான கொள்கைக்கு பேர் போன தட்சர் கன்சவேட்டிவ் கட்சியில் படிப்படியாக உயர்ந்து பிரிட்டனின் முதற் பெண் பிரதமரானார். கட்சியின் தலைவர்கள் செய்த தவறுகளை பயன்படுத்தி பிரதமராக இரு தடவை வெற்றி பெற்றார். தொழிற்கட்சி பலமடையும் சாத்தியம் பிரிட்டனில் இருந்தபோதும் பிரிட்டிஷ் பொதுமக்களின்மிதவாதத்தை மதிக்காது தீவிரவாதம் பேசியதோடு மக்கள் நலன்களைப் பாதிக்கும் 'சோஷலிச' நடவடிக்கைகளில் பொருளாதார வீழ்ச்சி காரணமாகத்தோல்வியடைந்தது.

இன்று ஏழாவது வருட ஆட்சியில் இருக்கும் தட்சர் தாம் மீண்டும்தொடர்வதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் - அமெரிக்காவிடமிருந்துபெறும் பொருளாதார உதவியைப் பொறுத்திருக்கிறது என்ற கொள்கை உடையவர். எனவே பிரிட்டிஷ் பொதுமக்களின் உணர்வுகளுக்குமாறாக, மந்திரிசபையைத் தன் பக்கம் கொண்டு மிக அநாகரிகமான முறையில் அமெரிக்காவிற்குப் பின் செல்கின்றார்.

இன்று உருவான நெருக்கடி 'வெஸ்ட்லன்ட்' விவகாரத்தில் ஏற்பட்டது. இதற்காகப் பாதுகாப்பு அமைச்சர் ராஜினாமாச் செய்துள்ளார். ஹெலிக்கொப்டர் உற்பத்திக்குரிய ஒரே ஒரு பிரிட்டனின் நிறுவனம் வங்குரோட்டு அடித்த நிலையில் அதனைப்பாதுகாக்க முறை தவறி அமெரிக்க உதவியை நாடியதே அமைச்சரின் ராஜினமாவிற்கு காரணம்.

தட்சர் பதவி துறக்கும் நிலைக்கு இந்த நெருக்கடி அவரைத் தள்ளக்கூடும்.

இந்த நான்கு பதவி அதிகாரப்போட்டிகளில் நான்கு பெண்கள் ஈடுபட்டிருந்த போதும் ''பெண்ணென்ற பிரத்தியேகம்'' அங்கு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் இந்த நாடுகள் வெவ்வேறாக இருந்தாலும் பிரச்னைகள் வேறுபட்டிருந்தாலும் இரு வல்லரசுகளின் தலையீடு ஊடுருவி நிற்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறையில்---

( 1-ம் பக்கத் தொடர்ச்சி)

"கோட்டை இராணுவ முகாமைஅகற்றுமாறும், 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தை வாபஸ்பெறுமாறும் கோரி, யாழ். கச்சேரியில் ஆரம்பமாகும் போராட்டம், படிப்படியாக தமிழ்ப்பிரதேசம் எங்கும் விஸ்தரிக்கப்பட்டு தமிழ்ப் பிரதேசத்தை முற்றாக ஸ்தம்பிக்க செய்யும் நிலையை உருவாக்கவேண்டும். அன்னியர் முன்னணி மட்டுமின்றி சகல மக்களும் சேர்ந்து எதிர்ப்புக் காட்ட வேண்டும். யாழ். கோட்டையிலுள்ள தேவாலயத்திற்கும் கோவிலுக்கும் முன்னர்போல் மக்கள் சென்று வழிபட வழிசெய்யவேண்டும். அதற்கு இராணுவத்தை அங்கிருந்து அகற்ற வேண்டும். இந்திய சுதந்திர போராட்டத்தின்போது ஆயிரமாயிரம் மக்கள் சிறை சென்றனர். சிறையில்இடமில்லை என்றநிலை ஏற்பட்டது. இதேபோன்ற நிலை இங்கும் ஏற்பட வேண்டும். எல்லோரும் ஒரு அணியில்திரண்டு போராட்டத்தில் குதிக்கவேண்டிய காலம் வந்து விட்டது என்றும் அவர் கூறினுர். [க]

## ராணுவமுகாமை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஊழியர் சங்கத்தினர், யாழ். பிரஜைகள் குழுவினர், மத குருக்கள், முன்னுள் யாழ் நகர பிதாக்கள், சட்டத்தரணிகள், டாக்டர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் உட்படச் சமூகத்தின் பல்வேறு துறையைச் சேர்ந்தவர்களும் வந்திருந்தனர்.

### சாத்வீகப் போராட்டம்

சாத்வீக முறையில் மக்களின் எதிர்ப்பைத் தெரிவிக்குமுகமாகப் பரந்த அளவில் ஒரு போராட்டத்தை ஆரம்பிப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

இப்போராட்டம் தொடர்பாக வடபகுதி இராணுவ அதிகாரிக்கு விளக்குவதற்கு திருவாளர்கள்: காமினி நவரத்தின, கு. நேசையா, அலோசியஸ், பீட்டர், எஸ். விசுவலிங்கம், திருமதி எம். அருணுசலம் ஆகியோரைக் கொண்ட குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. இக்குழுவினர் இன்று காலை 10 மணிக்குக் கூடி நடவடிக்கைகள்பற்றி முடிவு செய்வார்கள். [க]

## யாழ்.கோட்டை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சில் சுடுபட்டுச்சாவதுமேல் "

யாழ்ப்பாணத்தில் நடந்த பொதுமக்கள் கூட்டத்தில் பேசிய பாதிக்கப்பட்ட ஊழியர் சங்கப் பிரதிநிதி திரு. கே. எஸ். ஆறுமுகம் மேற்கண்டவாறு கூறினுர்.

கச்சேரியில் மறியல்செய்வதிலும்பார்க்க கோட்டையில் மறியல் செய்வதுதான் பொருத்தமானது என்றும் அவர் கூறினுர்.

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30
கவுண்டமணி - ஜீவிதா
பிறந்தேன் வளர்ந்தேன்

லிடோ சினிமா
10-30, 2-30, 6-30
விஜயகுமார்—ஸ்ரீவித்யா
தங்கவேலு நடித்த
ஆசை அறுபது நாள்

வெலிங்டன்
10-30, 2-30, 6-30
M. G. R.—லதா
நடித்த
நீதிக்கு தலைவணங்கு
[புதிய பிரதி]

## ரயில் பார்சல் ஏற்படுத்திய கலக்கம்!

[கொழும்பு]

குண்டுப் பார்சல் என்று சந்தேகிக்கப்பட்ட சிறு பொதியொன்று வெடிகுண்டு நிபுணர்களின்முன்நிலையில் உடுபிடவைகளுடன் நிறைந்திருக்கக் காணப்பட்டது.

கோட்டை ரயில் நிலையத்தில் நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றது. கைவிடப்பட்டநிலையில் 'இன்ரசிற்றி' யின் மலசல கூடமொன்றினுள் அப்பார்சல் காணப்பட்டது.

இராணுவம் அழைக்கப்பட்டு அப்பார்சல் மிகுந்த அவதானத்துடன் புகையிரத நிலையத்திற்கருகிலேயே திறக்கப்பட்டது ஆனுல் எதிர்பார்த்தது இருக்கவில்லை; புடவைகளே காணப்பட்டன.

இச்சம்பவம் காரணமாக நேற்று இன்ரசிற்றி தாமதமாகவே யாழ்ப்பாணம் வந்தது. [க]

## அதிகாலை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தின் போது 6 தீவிரவாதிகள் பலியானதாக அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தின்பின்னர் 7 தீவிரவாதிகள் தப்பிச்செல்ல வழியின்றி 'சயனைற்' அருந்தித் தற்கொலை செய்ததாகவும் அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை சுமார் முன்றரை மணிக்கு ஆரம்பமான மேற்படி மோதல் பிற்பகல் மூன்றுமணிவரை நீடித்தது.

குறிப்பிட்ட பகுதியில் தொடர்ச்சியாகக் கேட்ட குண்டுச் சத்தங்களும் துப்பாக்கிச்சூடுகளும் மட்டக்களப்பு மக்களை பெரும் பீதிக்குள்ளாக்கியது. இதன் விளைவாக மட்டக்களப்பு பகுதி நேற்று முழுவதும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

## வீட்டில்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிலும் பாதுகாப்பில்லை. மக்கள் என்னசெய்வதென்று தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கிறுர்கள். உடனடியாக ஏதாவது செய்து இதனைத் தடுத்து நிறுத்தவேண்டும். மக்கள் உயிரைப் பாதுகாக்கவேண்டும்"

## பெங்களூர்---

(1ம் பககத் தொடர்ச்சி)

கள், ரெலோ, ஈரோஸ், ஈ பி. ஆர். எல். எப். ஆகியவற்றிற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்று முன்னணி அறிவித்துள்ளது. (க)

## தொழிற்சங்க...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இச் சட்டத்தை வாபஸ்பெற வைக்கும் வகையில் எதிர்ப்புத் தெரிவிக்க இம்மாதம் 22-ம் திகதி பிற்பகல் யாழ்ப்பாணம் பலாலி வீதியிலுள்ள தொழிற்சங்க பணிமனையில் ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெறவிருப்பதாக கூட்டுக் குழு அமைப்பாளர் திரு. எஸ். விஜயானந்தன் தெரிவித்தார். [க]

## பாதுகாப்பு...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டத்தின்போது உண்ணுவிரதம் இடம்பெறுமென்றும் அவர் தெரிவித்தார்.

கல்லூரி மாணவ - மாணவிகள், பொது ஸ்தாபனங்கள், வர்த்தகர்கள், கடைச்சிப்பந்திகள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்படச் சகல பொதுமக்களும் இந்த மறியற் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி அதில் பங்குபற்றுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த மறியற் போராட்டம் ஏனைய அரசாங்கக் காரியாலயங்களுக்கும் பின்னர் விஸ்திரிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

## ஸ்தலத்திலே பலியானுர்

[புலோலி]

பருத்தித்துறை இராணுவ முகாமிற்கு பாண் விநியோகிக்கும் பாண் வியாபாரி தங்கராசா இராணுவ முகாமை நோக்கி பருத்தித்துறை சித்தி விநாயகர் பாடசாலையின் முன்புறமாகச் சென்றுகொண்டிருந்தபோது துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி ஸ்தலத்திலேயே மரணமானுர்.

இராணுவமுகாம் பக்கமாக இருந்துவந்த துப்பாக்கிச் சூட்டிற்கே இவர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலோலி மேற்கைச் சேர்ந்த பாண் வியாபாரி தங்கராசாவுக்கு 9 பிள்ளைகள் உண்டு.

## கவசவாகனம் சிறிது சேதம்

[முல்லைத்தீவு]

தீவிரவாதிகளின் தரைக்கண்ணி வெடிக்கு இலக்கான கவசவாகனம் ஒன்று சேதத்துக்குள்ளானது. இரு இராணுவ வீரர்கள் படுகாயத்துக்குள்ளானுர்கள்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் முள்ளியவளைப்பகுதியில் இடம்பெற்றது.

மாங்குளத்திலிருந்து நாற்பதிற்கும் அதிகமான நவீன வாகனங்கள் முல்லைத்தீவை நோக்கி வந்துகொண்டிருக்கையில் கவச வாகனமொன்று கண்ணிவெடிக்கு இலக்கானது. இதைத் தொடர்ந்து தீவிரவாதிகள் கைக்குண்டுகளை எறிந்து தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினர்.

இச் சம்பவத்தின்போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இருதரப்பிலும் சேதம் ஏற்படவில்லையாம்.

## பண்டத்தரிப்பு முதலிடம்

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டை கல்வி வட்டாரத்தில் அண்மையில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் பண்டத்தரிப்பு வலயம் எட்டு முதலிடங்களைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

ஆறு முதலிடங்களைப் பெற்ற வட்டுக்கோட்டை வலயம் இரண்டாம் இடத்தையும் இரு முதலிடங்களைப் பெற்ற காரைநகர் வலயம் மூன்ரும் இடத்தையும் பெற்றுள்ளன.

இப்போட்டிகள் யாவும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா தலைமையில் சிறப்பாக நடைபெற்றன. [ச]

## சமய அறிவுப் போட்டி முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

திருவெம்பாவை உற்சவத்தை முன்னிட்டு வண்ணார்பண்ணை ஸ்ரீ விசுவேசப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ருேர் விபரம் வருமாறு.

லோஜினி சண்முகராசா (தங்கப்பதக்கம்), இராசையா உமாராணி (வெள்ளிப் பதக்கம்), இ. குகானந்தன் இ. நித்தியரதி. கிருஷாயினி சண்முகராசா, துஷ்யந்தி சண்முகம், சிவசுப்பிரமணியம் சசிதரன், சிவசுப்சுப்புரமணியம் யமுனுராணி, செந்தில்மணிதேவி கந்தப்பிள்ளை, இளையதம்பி உதயகுமாரி, ப. மலைமகள், சிவராமலிங்கம் மணிலால், செல்லையா செந்தில் குமரன், வாசுகி சிவராமலிங்கம், கிரிஜா பசுபதி, அருளானந்தம் செல்வகுமார், வாசுகிசொக்கலிங்கம், கனகசுந்தரம் கார்த்திகேயன், [illegible] இரத்தினகோபால்.

## ஊர்காவல் படையினரின் துப்பாக்கிகளை வாபஸ்பெற விகாரை பிரதமகுரு கோரிக்கை

(வவனியா)

வவனியாவில் இரு சமூகத்தவரும் ஒற்றுமையாக வாழவேண்டுமானுல் ஊர்காவல் படைக்கு வழங்கிய துப்பாக்கிகளை வாபஸ்பெறவேண்டும் என்று வவனியாவிற்கு விஜயம்செய்த கல்விச்சேவைகள் அமைச்சர் லயனல் ஜெயதிலகாவிடம் வவனியா பௌத்த விகாரை பிரதமகுரு தெரிவித்தார்.

வவனியாவிற்கு விஜயம் செய்த அமைச்சரை வவனியா அரசாங்க அதிபர் திரு கே. ஸி. லோகேஸ்வரன் தச்சன்குளம் இராணுவமுகாமில் சந்தித்து நிலைமைகளை எடுத்துக்கூறினுர். இச்சந்திப்பின்போது ஜனுதிபதி ஜெயவர்த்தனுவின் மகன் ரவி ஜெயவர்த்தனுவும் கலந்துகொண்டார்.

செட்டிகுளம், பாவற்குளம் பகுதியிலிருந்து வெளியேறியவர்களை மீண்டும் பழைய இடங்களில் குடியமர்த்தவசதி செய்து தருமாறு அரசாங்க அதிபர் அமைச்சரைக் கேட்டுக்கொண்டார்.

## வர்த்தகர்கள் ஊர்வலம்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் 1000 மீற்றர் பாதுகாப்பு வலயப் பிரகடனத்தை வாபஸ் பெறக் கோரி இம்மாதம் 22ம் திகதி புதன் கிழமை காலை வர்த்தக நிலையங்களைப் பூட்டி, வர்த்தகர்கள், சிப்பந்திகள் யாழ் பஸ் நிலையத்திலிருந்து கச்சேரிக்கு ஊர்வலமாகச் சென்று அரசாங்க அதிபரிடம் மகஜர்ஒன்றை கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது? (க)

## மற்றுமொருவர் மரணம்

[யாழ்ப்பாணம்]

ஏழாலைப்பகுதியில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த உரும்பிராயைச் சேர்ந்த சுதர்சன் [17] நேற்று அதிகாலை மரணமானுர்.

அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் கெக்கிராவையைச்சேர்ந்த யூசுப் [28 வயது]ஓரளவு குணமடைந்து வருகிருர்.

## தீயணைக்கும் படை

[யாழ்ப்பாணம்]

நல்லூரில் நிறுவப்பட்டுள்ள தீயணைக்கும் படைக்காரியாலயத்தை மார்ச் மாதம் 10ம் தேதி பிற்பகல் கனடா உயர் ஸ்தானிகர் திரு. டி. எம். கொல்கொட் திறந்துவைப்பார்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் தாம் விடுத்த அழைப்பை அவர் ஏற்றுக் கொண்டுள்ளதாக நேற்று தெரிவித்தார். [க]


## நன்றி நவிலல்

எங்கள் வாழ்வுக்கும் உயர்வுக்கும் அயராது உழைத்த உத்தமரும், எங்கள் குடும்பத் தலைவருமாகிய உயர்திரு. இராமநாதர் முத்தையா அவர்கள் 20-12-1985-ல் சிவபதமடைந்த செய்திகேட்டு உடன் உதவியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும், அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய வைபவங்களிற் கலந்துகொண்டவர்களுக்கும் எங்கள் நன்றி கலந்த வணக்கத்தைச் சமர்ப்பிக்கிருேம்.

திருமதி ஞானம்மா முத்தையாவும்,
குடும்பத்தினரும்

112, சிவராசா அவென்யு,
திருநெல்வேலி. 20-1-86. (C 296)



## மனிதாபிமான வேண்டுகோள்

கடந்த வியாழன் இரவு (16-01-1986) இனந்தெரியாதவர்களால் நாவலர் வீதியில் அமைந்துள்ள 'குயிக் ஸ்ரார் கலர் சேவீஸ்' என்ற ஸ்தாபனத்தில் இருந்து விலையுயர்ந்த கமராக்கள் உட்பட பல பெறுமதியான பொருட்கள் கொள்ளையடித்துச் செல்லப்பட்டன. களவாடப்பட்ட கமராக்கள் விற்பனைக்காகவும் திருத்த வேலைகளுக்காகவும் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டவை. இப்பரிதாப நிலையை உணர்ந்து, மனிதாபிமான அடிப்படையில் மீட்டுத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

'குயிக் ஸ்ரார் கலர் சேவீஸ்'
உரிமையாளரும், ஊழியர்களும்.

A 300



நியூ விக்ரேஸ்
புதிய
## வீடியோபட வெளியீடுகள்

1. கருமேடு கருவாயன்
விஜயகாந்த் — நளினி

2. ஆண் பாவம் V. G. P.
பாண்டியன் — ரேவதி

நியூ விக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

யாழ்ப்பாணம். தொலைபேசி: 23532
A-110


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலுதவிப் பரீட்சையில் சித்திபெற்றோருக்குசான்றிதழ்

(மாவிட்டபுரம்)

இலங்கை சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கத்தினால் நடாத்தப்பட்ட முதலுதவிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கிறது.

யாழ். மாவட்ட அரசினர் வைத்தியர்களின் உதவியுடன் நடாத்தப்பட்ட முதலுதவி பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்களை அந்த அந்தப்பிரிவு தலைவர்கள் மூலம் வழங்கப்படவிருப்பதாக வடபிராந்திய ஆணையாளர் திரு. சி. எஸ். சுப்பிரமணியம் தெரிவித்தார்.

வேம்படி மகளிர்கல்லூரியில் 57 பேரும், சென். ஜோன்ஸ் கல்லூரியில் 53 பேரும், டிறிபேக் கல்லூரியில் 20 பேரும், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 39 பேரும், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 29 பேரும் உடுவில் கிழக்கு மகளிர் சமூக முன்னேற்ற சங்கததில் 24 பேரும், மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கத்தில் 16 பேரும்சித்தியடைந்துள்ளனர்.

## அரச துண்டுப்பிரசுரம்

(கொழும்பு)

அப்பாவித் தமிழ் மக்களுக்குப்பின்னால் மறைந்திருந்து தாக்குதல்களை நடத்தாமல் ஆயுதப்படையினருடன் நேருக்குநேர் போர்புரியுமாறு தமிழ்தீவிரவாதிகளுக்கு சவால் விடும் வகையில் தமிழ் ஆங்கில மொழிகளில் அரசாங்கத்தால் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் நலன்களுக்காகப் போராடுவது போல் தமிழ்தீவிரவாதிகள் பாசாங்கு செய்கிறார்கள் என்றும் அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ய-து]

## மூளைக்காய்ச்சல் நோய்

[கரவெட்டி]

மூளைக்காய்ச்சலுக்குள்ளான இளம்பெண் ஒருவருக்கு மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

வவனிக்குளம் வாசியான திருமதி சந்திரா சீவரத்தினம் என்ற பெண்மணி கடும்நோயினால் இவ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்தே அவருக்கு மூளைக்காய்ச்சல் நோய் ஏற்பட்டதாக கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து இவரது உடலிலிருந்து பெறப்பட்ட இரத்தம் மேல் பரிசோதனைக்காக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## படப்பிடிப்புக் கருவிகள் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

யாழ். நாவலர் வீதியிலுள்ள படப்பிடிப்பு நிலையமொன்றில் கடந்த வியாழக்கிழமை இரவு சுமார் 25,000 ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

படப்பிடிப்புக் கருவிகள், பிலிம் சுருள்கள் மற்றும் படப்பிடிப்புத் தொடர்பான சாதனங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. [சு]

## அமரர் இராசதுரை

கொடிகாமத்தைச் சேர்ந்த ஆசிரியர் கந்தையா இராசதுரையின் நினைவுதினம் நேற்றாகும்.

கச்சாய் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், இரண்டினையும் வளர்ப்பதற்காக வேதனம் பெறாத ஒரு ஆசிரியராக வேண்டிய சேவைகளை எல்லாம் செய்தார்.

பாடசாலை வேலைகள் தவிர்ந்த பகல் இராப்பொழுது எல்லாம் சமூக சமைய தம் பணி எனச் சலியாது உழைத்தார். சன சமூக நிலையங்களை நிறுவுதல், கோயில்களில் புராணப்படிப்பு குடும்ப உறவினர், அயலவர் பிரச்னைகளைத் தீர்த்தல் என்று இன்னோரென்ன பணிகளுடன் நல்ல வாசகர்களை உருவாக்குவதற்கு வேண்டிய வழியினை எல்லாம் இவர் தேடிக்கொடுத்தார்.

1951 முதல் அரசினரின் கீழ் ஆசிரிய நியமனம் பெற்று ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேலாக பிறவூரிலும் சொந்த வூரிலும் இவர் வைத்திட்ட சேவை மிகவும் மகத்தானது. இவர் கடசியாக 11 ஆண்டு காலாக கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் சேவை ஆற்றும் காலத்தில் இவ் வித்தியாலயத்தை ஒரு மகா வித்தியாலயமாக ஆக்க வேண்டும் என்றும் உழைத்த அவரின் ஆசை இன்று நிறைவேறிவிட்டது. கல்வியுலகு இவரை என்றும் மறவாது. இவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

-கிரி

## பெரியார் ஒருவர்

உபகார சிந்தை, இன் சொல், பொருள் வளம் இருந்தும் பெருமிதம் இல்லாத குணம், இறை பணியில் இன்பம் காணும் இதயம் என நிறை வாழ்வு வாழ்ந்த திரு. இ. முத்தையாபிள்ளை இன்றில்லை என்ற செய்தி வடபகுதி அன்பர்களை மட்டுமன்றி மலைநாட்டின் பதுளை நண்பர்களையும் துயரத்தில் ஆழ்த்துகிறது.



பல வருடங்களுக்கும் மேலாக பதுளையில் வர்த்தசப் பணியுடன் நற்புகழையும் பெற்றுவந்த திரு. முத்தையா அவர்கள் கோவிற் பணிகளும் அடியாரைப் பேணலும் வருவோரை உபசரித்தலும் இவர்களது இல்லத்தில் இணைந்த நிகழ்ச்சிகளாயின. இல்லத் துணைவியாரும் இதற்கு ஏற்றவராஞர். தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் சுவாமி சுத்தானந்த பாரதியாரும் இவ்வகைப் பெரியோரும் எழுதியுள்ள கடிதங்கள் இதற்குச் சான்று பகிர்கின்றன.

சொந்தக் கிராமமாகிய புங்குடுதீவிலும் சுற்றம் சூழ வாழ்ந்திட இவர்கள் தவறியதில்லை. பதுளையிலும் சுத்தத் தமிழர்களாகவே இவர்கள் வாழ்ந்தார்கள். எனவே தமிழர்களைத் தாக்கிய பொருமைத் தீ 1983 இவர்களையும் தாக்கிற்று. சங்கு சுட்டாலும் வெண்மை தரும். அவ்வித உயர்வு இவர்களிடம் கூடவே இருந்தது. அன்ஞர் சிவபதமடைந்து 31 நாளாகின்றது.

-நாக பத்.

## இலவச வைத்திய சேவை

(கரவெட்டி)

வதிரி தமிழ் மன்றம் இரு வாரங்களுக்கு ஒருமுறை இலவச வைத்திய சேவையினை நடத்தி வருகிறது.

ஞாயிறு நாட்களில் நடத்தப்படும் இவ் வைத்திய சேவையின்போது யாழ். அரசினர் வைத்தியசாலை டாக்டர் இ. கௌரிபாலன் நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறார். இவருக்கு உதவியாக யாழ். அரசினர் வைத்தியசாலையைச் சேர்ந்த திரு. எம். சச்சியானந்தன் பணியாற்றி வருகிறார்.

ஒவ்வொரு தடவையும் ஐம்பது நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதுடன் அவர்களுக்கு வேண்டிய மருந்து வகைகளையும் தமிழ் மன்றம் வழங்கி வருகிறது.

## சிவசுப்பிரமணியம் நினைவஞ்சலிக் கூட்டம்

[கொழும்பு]

ஓய்வுபெற்ற நீதியரசர் அமரா வி. சிவசுப்பிரமணியம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் இன்று 20-ம் திகதி திங்கட்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும். [ய-து


# தரத்திற்குப் பேர்போன பீ.சீ.சீ. வழங்கும் மற்றுமோர் மாபெரும் விலைக்குறைப்பு!

| சலவை/கழுவு சோப் | ரூ. சதம் |
|---|---|
| சவரின் பார் | 15 . 00 |
| சன் - றே | 4 . 90 |
| ஸ்னோ - வைட் | 3 . 10 |
| **வாசனை சோப்** | |
| பீசிசி சந்தன சோப் | 4 . 75 |
| புதிய சுவேந்திரா | 4 . 50 |
| நைட் அன்ட் டே | 3 . 75 |
| கோல் டார் | 3 . 75 |
| ஏஞ்சல் பேபி சோப் | 4 . 50 |
| ஹெறல்த் ஜோய் | 3 . 70 |

| சவரப் பொருள்கள் | ரூ. சதம் |
|---|---|
| சவரச் சவர்க்காரக் கேக் | 5 . 25 |
| சவர மாற்றுச் சவர்க்காரம் | 5 . 00 |
| சவரப் பிளாஸ்திக் | 7 . 00 |
| **வாசனைப் பவுடர்** | |
| புதிய சுவேந்திரா | 17 . 00 |
| நைட் அன்ட் டே | 15 . 50 |
| **பைனோல்** | |
| போத்தல்கள் - (பிளாஸ்திக்) 750 மி. லீ. | 27 . 50 |
| கொள்கலங்கள்-4.5 லீட்டர் | 155 . 00 |

| பேர்மா - ஷாப் | ரூ. சதம் |
|---|---|
| பிளேட்கள் | 1 . 50 |
| பாதுகாப்பான றேசர் | 16 . 95 |
| **சம்பயன் - (கவசத்துடன்)** | |
| பிளேட்கள் | . 65 |
| **சம்பயன் - (கவசமின்றி)** | |
| பிளேட்கள் | . 60 |
| **வில்கின்சன்** | |
| ஒருமுறைப் பாவனை றேசர் | 4 . 10 |
| **கிளீன்** | |
| கழுவு தூள் | 8 . 95 |
| வைற் ஒயில் | 15 . 00 |
| குக்ஸ் ஜோய் | 17 . 00 |

BCC அரச உடைமை ஆக்கப்பட்ட பிரிட்டிஷ் சிலோன் கோப்பறேஷன்



Ribbs N&L


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

வாகனங்களின் 'தராதரம்' பற்றி மதிப்பீடுசெய்யும் போது, வாகனமொன்றுக்கு முந்நூறு ரூபா கூலியாகக் கொடுத்தால்தான் மதிப்பீட்டுப் பத்திரம் கிடைக்கும்.

அரசாங்கம் கடந்தமாதம் நடுப்பகுதியில் 'திடுதிப்' என்று 'கருணை' அறிவிப்பை வெளியிட்டதிலிருந்து, ஒரு வாகனத்துக்கு நூறுரூபா வீதம் கழிக்கப்பட்டது. அதாவது, இப்பொழுது முந்நூறுக்குப்பதில் இருநூறு கொடுத்தால்போதும்! ஆனல், கட்டணக் குறைப்புப்பற்றி அரசாங்கம் அறிவித்த நாளிலிருந்து 'இதுசெயல்பட்டிருக்குமா? அல்லது இவ்வருடம் ஜனவரி முதல் அமுலுக்கு வந்ததா என்பது ஒருபக்கமிருக்க-

ஒரு வாகனத்துக்கு முந்நூறுரூபா பெற்று மதிப்பீட்டுப் பத்திரம் வாங்கியவர்கள்; அரசாங்கம் ஒரு வாகனத்துக்கு நூறுரூபா கழிவு என்று அறிவித்ததும் அந்த வாகனச் சொந்தக்காரர்களை வரவழைத்து நூறுரூபாவை திருப்பிக் கொடுக்கிறார்கள் என்றல் அவர்களை எப்படிப் பாராட்டலாம்?

டிசம்பர் மாதம் 15ம் திகதி முதல் கட்டணக் குறைப்பு அமுலுக்கு வந்ததாக அரசு அறிவிப்பு கூறியது இதற்கிணங்க; பதினைம்திகதி முதல் முந்நாறு ரூபா வீதம் பெற்றுக்கொண்ட முப்பத்து இரண்டு வாகனங்களுக்கும் நூறுரூபா திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது!

வாடிக்கையாளர்களின் நன்மதிப்பையும் நல்லெண்ணத்தையும் பெறும் ஸ்தாபனம்: யாழ். பற்றிசியன்இன்ஸ்ரிற்றியூட் ஆகும். இந்த ஸ்தாபனத்துக்கு மற்றுமொரு நல்ல பெயரைப் பெற்றுக்கொடுத்த ஸ்தாபனத்தின் பதிவாளர் திரு. எம். சோமசுந்தரத்துக்கு ஒருசபாஷ் கொடுப்போமா?

"ஊடுருவி"

## நிவாரண உதவி நிறுத்தம்

[கிளிநொச்சி]

வவனியா, பாவற்குளம், [illegible]ன்குளம், அனுராதபுரம் முதலான பகுதிகளில் இருந்து அகதிகளாக கிளிநொச்சி மாவட்டத்திற்கு வந்து தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கான நிவாரண உதவியை நிறுத்துமாறு கிளிநொச்சி அரசாங்க அதிபருக்கு அரசிடமிருந்து உத்தரவு கிடைத்துள்ளதாக தெரியவருகிறது.

இந்த வேளை அகதி முகாங்களில் உள்ள அரச உத்தியோகத்தர்களுக்கும் கடந்த இரு வாரங்களாக முகாங்களில் இருந்து கிடைத்து வந்த உதவிகள் அரச உத்தரவின் பேரில் நிறுத்தப்பட்டுள்ளது.

## பாவனையாளரின் நலன்கருதி புதியசந்தை திறக்கப்பட்டது

(புலோலி]

"உற்பத்தியாளர்களும்பாவனையாளர்களும் தமது தேவைகளைப்பூர்த்தி செய்து கொள்வதற்கு சந்தை வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியது முக்கியமாகும். இதனடிப்படையிலேயே யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் உத்தரவின் பேரில் இப்பகுதி உற்பத்தியாளர், பாவனையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமுகமாக இப் புதிய பொது சனச்சந்தை திறந்து வைக்கப்படுகின்றது".

இவ்வாறு பருத்தித்துறை புலோலி கிராமக் கோட்டடியில் யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை புலோலி உப - அலுவலகத்தின் பொது சனச்சந்தை யொன்றைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை புலோலி உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. பீ. சனகசபாபதி குறிப்பிட்டார். திரு. எஸ். கணேசமூர்த்தி மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து உரையாற்றிய திரு. சனகசபாபதி குறிப்பிட்டதாவது.

"இன்று இங்கு திறந்து வைக்கப்பட்டுள்ள மீன் மரக்கறி பொது சனச்சந்தைகளின் அபிவிருத்திகள் இப்பகுதிகளின் உற்பத்தியாளர்களினதும், பாவனையாளர்களினதும் ஒத்துழைப்பிலும் நடவடிக்கைகளிலேயே தங்கியுள்ளது. இம் பகுதியில் மீன் சந்தை யொன்றையும், மரக்கறிச்சந்தை யொன்றையும் திறந்து தருமாறு மக்கள் கோரியதற்கிணங்கவே கிராம நீதிமன்றக் கட்டிடமாக இயங்கிய இக்கட்டிடத்தைப் பொது சனச்சந்தையாக மாற்றுவதற்கு அபிவிருத்திச்சபை அனுமதி வழங்கியது இப் பொது சனச்சந்தைகள் வளர்ச்சியடைந்து இப்பகுதி மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்க வேண்டும்."

## "துப்பாக்கிச் சூட்டினல் இறந்திருக்கலாம்"
### உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்கள் மரனவிசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"அரியாலையிலிருந்து நாவற்குழி இராணுவ முகாமிற்கு இராணுவத்தினர் நடந்து சென்றபோது சரமாரியாகச் சுட்டுக்கொண்டு சென்றனர். செம்மணி உப்புக் கூட்டுத்தாபன காரியாலயம் விடுதியையும் நோக்கி சுட்டுக்கொண்டு சென்றனர். உப்புக் கூட்டுத்தாபன ஊழியர் இருவரும் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டினல் காயமடைந்து இறைந்திருக்கலாம்."

செம்மணி உப்புப் பாத்திக்குள்ளிருந்து சடலமாக மீட்கப்பட்ட இருவரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த உப்புக்கூட்டுத்தாபன கூலியான சின்னவன் சின்னத்தம்பி மேற்கண்டவாறு கூறினர்.

யாழ். பதில் நீதவான க. கேசவன் மரணவிசாரணை நடத்தினர்.

உப்புக் கூட்டுத்தாபன மேற்பார்வையாளர் மனுவேல் பெனடிக் [58 வயது]. உப்புக் கூட்டுத்தாபன விடுதி காவலாளி ப கதிரன் அல்லது பொன்னன் [59 வயது] ஆகியோரின் சடலங்கள் உப்புப் பாத்தியிலிருந்து மீட்கப்பட்டு நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறைக்குக் கொண்டுவரப்பட்டது.

சின்னத்தம்பி தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

"இம்மாதம் 16-ந் திகதி காலை 6 மணிக்கு கடமைக்கு வந்தேன். நண்பகல் 12-30 மணி போல் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்டன அப்போது இராணுவத்தினர் சுட்டுக்கொண்டு நடந்து நாவற்குழி முகாமிற்கு சென்றனர். கவசவாகனம் ஒன்று வந்து சில இராணுவத்தினரை ஏற்றிக்கொண்டு நாவற்குழிக்குச் சென்றது.

"விடுதி வீட்டிற்குப் போன போது பெனடிக்கும், கதிரனும் இருக்கவில்லை. அவர்களைக் கூப்பிட்டுப் பார்த்தேன் பதிலில்லை. விடுதி முன்பக்க கதவு பூட்டப்பட்டிருந்தது. பின்பக்கம் திறந்திருந்தது.

"மறுநாள் விடுதிக்கு வந்த போது உப்புப்பாத்திக்குள் இச்சடலங்கள் கிடப்பதாக மீனவர்கள் சொன்னதாக மற்றக் காவலாளி கூறினர்.

சக ஊழியருடன் உப்புப் பாத்திக்குள் தேடினேம். சடலங்களைக் காணவில்லை. மறுநாள் சடல்ங்களைத் தேடி எடுத்து உப்புக் கூட்டுத்தாபனக் காரியாலயத்தில் வைத்திருந்தனர். 16-ந் திகதி இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது இருவரும் காயமடைந்து இறந்திருக்கலாம்"

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது [க]

## கிளிநொச்சி அகதிமுகாம் விரைவில் இடம்மாறும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அக்கராயன் குளப்பகுதியில் இயங்கி வந்த இரு அகதி முகாங்கள் பாதுகாப்புப்படை அதிகாரிகளின் உத்தரவின் பேரில் இடமாற்றஞ் செய்யப்படவுள்ளது.

இந்த உத்தரவைத் தொடர்ந்து ஆரோக்கியபுரம், அமைதிபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள இரு அகதி முகாங்களும் கனகாம்பிகைக் குளத்திற்கு இடமாற்ற துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கனகாம்பிகைக் குளத்தில் கடந்த 1983 ம் ஆண்டு ஜூலை கலவர கால அகதி முகாம் இருந்த இடத்தில் ஒரு லட்சத்து ஐம்பதினயிரம் ரூபா செலவில் ஐந்து வாடிகள் அமைக்கப்படவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த வாடிகளில் இரு அகதி முகாங்களில் இருந்து கொண்டுவரப்படும் சுமார் 120 குடும்பங்கள் தங்கி இருக்க வசதி செய்து கொடுக்கப் படவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

## 'அன்பு, கருணை, சேவை மனித வாழ்வில் அவசியம்'

(கிளிநொச்சி)

"சர்வோதயத்தை விட்டு மக்கள் பிரிந்துவிட முடியாது" என்று கிளிநொச்சியில் நடைபெற்ற சர்வோதய மகாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் வடபகுதி சர்வோதய வெளிக்கள இயக்குநரும், அமைப்பாளருமான திரு.கே. கதிரமலை கூறினர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப் படவேண்டிய அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக இம் மாநாடு கூட்டப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட சர்வோதய அமைப்பாளர் திரு எஸ். கே. வேலாயுதபிள்ளை இதற்குத் தலைமை தாங்கினர்.

சர்வோதய அமைப்பாளர் திரு. கதிரமலை மேலும் பேசுகையில்: "அன்பு, கருணை, சேவை இம் மூன்றும் ஒவ்வொருவர் வாழ்விலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்ருகும். சர்வோதயம் மக்கள் வாழ்வில் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தது. சர்வோதயத்தை விட்டு மக்கள் பிரிந்துவிடவேமுடியாது நல்ல எண்ணம் கொண்டோர் அனைவரும் சர்வோதயத்தை நாடவேண்டும்."

"சர்வோதய ஆசிரியர்களுக்கு சமூகத்தில் பாரிய பொறுப்பு உண்டு. இவர்கள் மாணவர்களுக்கு கற்பிக்கும் வேளை தவிர்ந்த நேரத்தில் தமது பகுதிக் கிராமம் முன்னேற பாடுபடவேண்டும்" என்றார்.

பூநகரிப் பகுதி சர்வோதய அமைப்பாளர் திரு. வே. சுப்பிரமணியம் உட்படப் பலர் மாநாட்டில் உரையாற்றினர்கள்.

## பலியானேர் 6 ஆக உயர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உருத்திரபுரம் பகுதியில் இராணுவ சோதனையின் போது ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகங்களில் பலியானேரின் எண்ணிக்கை ஆருக உயர்ந்துள்ளது. சில சடலங்கள் வயல் வெளியிலும் பற்றைக்குள் இருந்தும் மீட்கப்பட்டுள்ளன.

இதே வேளை கிளிநொச்சி ஆஸ்ப்பத்திரிச் சவச்சாலையில் இராணுவத்தால் சேர்க்கப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்களும கடத்தப்பட்டுள்ளன

## நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

மூன்று நூல்களுக்கான அறிமுக விழா தென் புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

கோகிலா ம[illegible] புலோலியூர் ஆ[illegible] வேலோன் இணைந்தெழுதிய 'அறிமுக விழா', சிறுகதைத் தொகுதியும் புலோலியூர் க சதாசிவம் எழுதிய "மூட்டத்தினுள்ளே", "ஓர் அடிமையின் விலங்கு அறுகிறது" ஆகிய நூல்களின் அறிமுக [illegible] றது. (பி)

## யாழ். தபாலகத்தில் இன்றுமுதல் பகல்சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். தபால் நிலையத்தைப் பாதுகாப்பான வேறு இடத்துக்கு மாற்றுவது பற்றி மேலிடம் ஆராய்ந்து வருகிறது.

யாழ். நகரிலும், நல்லூர்ப் பகுதிகளிலும் இதற்காக சில கட்டடங்களை வழங்க பொது மக்கள் முன்வந்துள்ளனர்.

கடந்த மூன்று தினங்களாக தபால் கந்தோர் ஊழியர்கள் கடமைக்குச் செல்லவில்லை. இன்று முதல் தபால் அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை கடமையாற்றச் சம்மதித்துள்ளனர். இரவில் கடமையாற்ற மாட்டார்கள்.

கடந்த 5நாட்களாக தபால சேவைகள் சீராக நடைபெற வில்லை. யாழ்.தேவி மூலம் வந்த தபால் பைகள் தபால் நிலையத்தில் தேங்கிக் கிடக்கின்றன. சிற்றூழியர் வேலைக்கு வராததினுல் அவை தரம் பிரிக்கப்படாமலுள்ளன. இதே போன்று இங்கிருந்தும் தபால் பைகள் அனுப்பப்படாமல் இருக்கின்றன.

சில இடங்களில் தபால்கள் எடுத்து வரப்பட்டு தபால் கந்தோரில் வைக்க பட்டுள்ளது. வ.பி.போ.ச. பஸ் போக்குவரத்து ஒழுங்காக இல்லாமையால் தபால் சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

## அனுமதியின்றி பெண் ஊழியர்களை இரவுவேலைக்கு அமர்த்தத் தடை

(கொழும்பு)

பெண் ஊழியர்களை அனுமதியின்றி இரவு வேலையில் அமர்த்தும் தொழில்நிறுவனங்கள் மீது தொழில் திணைக்களம் தகுந்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பெண் ஊழியர்களை வேலைக்கமர்த்தும் நிறுவனங்களின் விபரங்களை தொழில் திணைக்களம் திரட்டிவருகிறது. 165 கைத்தொழில் நிறுவனங்கள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 12 நிறுவனங்கள் சட்டவிரோதமாகவே பெண் ஊழியர்களை இரவு நேர வேலையில் அமர்த்தியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டத்தின் பிரகாரம் ஒருமாதத்தில் பத்துநாட்களுக்கே பெண் ஊழியர்களை இரவுநேர வேலைக்கு அமர்த்த முடியுமெனவும் அவ்வாறு அமர்த்தும் பட்சத்தில் வழமையான சம்பளத்தைவிட நாளொன்றுக்கு 9 மடங்கு அதிகமான சம்பளம் வழங்குவதோடு மேலதிக வசதிகளும் வழங்கப்பட வேண்டுமென தொழில் திணைக்களம் அறிவித்துள்ளது. [ச]

## சிரமதானம்

[மானிப்பாய்]

யாழ். ஆனைக்கோட்டை ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் பாடசாலை வாரத்தை முன்னிட்டு சிரமதான வேலைகள் விரிவாக நடைபெற்றன.

வகுப்பறைகள் துப்பரவு செய்யப்பட்டும், தளபாடங்கள் கழுவப்பட்டும் கரும் பலகைகளுக்கு மை பூசப்பட்டும் செப்பனிடப்பட்டன. வகுப்பறைகளுக்கு வெளிச்சம் மேலும் கிடைக்கவகை செய்யுமுகமாக கூரைகளுக்கு காற்ருடி ஓடுகள் போடப்பட்டன. பலவித பயன்தரும் மரங்களும் இந்த வாரத்தில் மாணவர்களால் நாட்டப்பட்டன.

இந்த வாரத்தைக் கொண்டாடுவதில் அதிபர் திருமதி பா. கந்தசாமி தலைமையில் ஆசிரியர்கள் ,மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள், பழையமாணவர்கள் ஆகியோர் பங்குகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# சமாதானம் என்பது இன்று கேள்விக்குறியாகிவிட்டது

## உலக சமயதினக்கூட்டத்தில் கவலை

''(ஐ. சண்முகலிங்கம்)

''இன்றைய சூழ்நிலையில் உலக சமாதானம் என்பது எல்லாமட்டங்களிலும் ஒரு கேள்விக்குறியாகவே நிற்கிறது உலக வல்லரசு அணிகள் தொடக்கம் எமது உள்ளூர் கிராமப்புறம் வரை போட்டியும், பூசலும், ஆக்கிரமிப்பும், ஆயுதப்போராட்டமும் நடந்தவண்ணமுள்ளன.''

யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் நேற்று நடந்த உலக சமயதின வருடாந்த அனுட்டான கூட்டத்தில் பேசிய யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு வித்தியானந்தன் மேற்கண்டவாறு கூறினர்.

''சித்திரவதைகள், கொலைகள், கொள்ளைகள் தொடர்ச்சியாக உள்ளன. இத்தகைய நிகழ்ச்சிகளின் எதிரொலியால் சமாதானம், அமைதி ஆகிய சொற்களின் பொருளுண்மையை அகராதிகளில் மட்டுமே தேடவேண்டியவர்களாகவுள்ளோம்'' என்றும் அவர் கூறினர்

பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள், ''உலகிலுள்ள எல்லா மக்களும் இன்பமாக இருக்கவேண்டும் என்பதே இறைவன் சந்நிதானத்தின் தத்துவமாக உள்ளது'' என்று கூறினர்.

சமயத் தலைவர்களும் உரையாற்றினர்கள்.

# இலங்கை இனப்பிரச்னை

# விளம்பர அமர்க்களமில்லாத சமாதான முயற்சிகள்!

## 'இந்து'வில் ஜி. கே. ரெட்டி

[கொழும்பு]

''இலங்கைஇனப்பிரச்னைக்கு வீண் விளம்பரம், அமர்க்களம் இல்லாமல்அமைதியானமுறையில் காத்திரமான சமாதான முயற்சிகள் இடம்பெற்றுவருகின்றன'' என்று பிரபல பத்திரிகையாளரான ஜி. கே. ரெட்டி சென்னை 'இந்து' பத்திரிகையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:- ''இலங்கை அரசு அந்த நாட்டின் இனப்பிரச்னை தொடர்பாக மேற்கொள்ளும்சமரசமுயற்சிகளின் அடிப்படையிலேயே இந்திய அரசு, அதன் நடவடிக்கைகளைத் தொடரவிருக்கின்றது.

''இதன் காரணமாகவே இலங்கை விவகாரம் தொடர்பாக இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியின் இலங்கை விஜயத்தையும் இந்திய அரசு பின்போட்டுள்ளது.

''இலங்கைத் தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்த புதியஆலோசனைகளைஇலங்கை அரசாங்கம் நன்கு பரிசீலிக்க வேண்டுமென இந்திய அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. அந்த ஆலோசனைகளின் அடிப்படையில் இலங்கை அரசு இனப்பிரச்னைத் தீர்வுக்கான காத்திரமுள்ள-தமிழர்களைத் திருப்திப்படுத்தக்கூடிய புதிய யோசனைகளை முன்வைக்கவேண்டுமென்பதிலேயே இந்திய அரசு கருத்தாகவுள்ளது.

''இத்தகைய ஆக்கபூர்வமான யோசனைகள் முன்வைக்கப்படும் பட்சத்திலேயே திரு. ரொமேஷ் பண்டாரியை இலங்கைக்கு அனுப்புவது குறித்து இந்திய அரசு ஆவன செய்யும்.

''எது எப்படியிருந்தபோதிலும் இலங்கை இனப்பிரச்னைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி, இந்தியஅரசு, இலங்கை அரசு ஆகியன சார்பில் காத்திரமான சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இம்முயற்சிகளில் இலங்கையின் பிரபல சட்டத்தரணிகளில் ஒருவரான கலாநிதி நீலன் திருச்செல்வம், இந்திய உயர்ஸ்தானிகர் திரு.ஜே. என். டிக்ஸிற் ஆகியோர் தீவிரமாக இயங்கிவருகின்றனர்.

''கலாநிதி திருச்செல்வம் இதுசம்பந்தமாக உயர் ராஜதந்திர மற்றும் அரசியல் பிரமுகர்களுடன் இடையருத தொடர்புகளை ஏற்படுத்திவருகின்றார். அவரின் இம்முயற்சிகளை திரு. டிக்ஸிற் இந்திய அரசுக்கு அவ்வப்போது தெரிவித்துவருகிறார்.

''இலங்கைப் பிரச்னைக்கான சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமாக இடம்பெற்றுவரும் இவ்வேளை, இந்நாட்டில் இராணுவம் யுத்த நிறுத்த மீறல்களில் இறங்கியிருப்பதுகுறித்து இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தி மிகுந்த கவலை கொண்டுள்ளார்.'' (ய-கி)

# கச்சதீவில் இராணுவ சாதனங்கள்?

[புதுடில்லி]

கச்சதீவில் தொலை தூரங்களைக் குறிபார்க்கும் பீரங்கிகள் பொருத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய பாதுகாப்புப் புலனாய்வுத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இந்தஇராணுவ சாதனங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் இராமநாதபுரத்திற்குத் தெற்கே கச்சதீவு காணப்படுகின்றது. பதினறு வருடங்களுக்குப் பின்னர் இந்திய அரசாங்கத்தினல் இத்தீவு இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது தெரிந்ததே

ஒரு வழிபாட்டுக்குரிய, கத்தோலிக்க மதத்தவரின் புனித தலமாகவே இத்தீவு பிரபலம் பெற்றிருந்தது. இலங்கை-இந்திய யாத்திரீகர்கள் இங்கு எவ்வித கட்டுப்பாடுமின்றிச் சென்றுவரும் வகையிலும் விசேட குடிவரவு-குடியகல்வுச் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

ஒவ்வொரு ஆண்டிலும் பங்குனி மாதம், கச்சதவு அந்தோனியார் தேவாலய உற்சவங்கள் நடைபெறுவதுண்டு. ஆனல் கடந்த சில வருடங்களாக இலங்கையில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையை அடுத்தே இந்த உற்சவங்கள் கைவிடப்பட்டு, இத்தீவும் சனசஞ்சாரமற்ற ஒரு பிரதேசமாக்கப்பட்டது

இருந்தபோதிலும் கடந்த ஆண்டு (1985) டிசம்பர் மாதம் இத்தீவில் இராணுவ நடமாட்டங்கள் இடம்பெறுவது இந்திய அரசினல் அறிந்துகொள்ளப்பட்டது. இதுதொடர்பாக இந்திய பாதுகாப்புத்துறை மேற்கொண்ட புலனாய்வுகளை அடுத்து அத்தீவில் தொலை தூரங்களைக் குறிபார்க்கும் பீரங்கிகள் பொருத்தப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவுக்குத் தென்புறமாக இருந்து இந்திய பாதுகாப்புத்துறை வட்டாரங்களால் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் இத்தீவில் நான்கு தொலை தூரப் பீரங்கிகள் வைக்கப்பட்டிருப்பது பதிவுசெய்யப்பட்டுள்ளது. இப்பீரங்கிகளுக்கு இலகுவில் இனங்காணமுடியாதவாறு சூழலுக்கேற்ற வகையில் 'பச்சோந்தி' வடிவம் கொடுக்கப் பட்டுள்ளதாகவும் இந்திய புலனாய்வுத்துறை புகைப்பட ஆதாரங்களுடன் அறிக்கை வெளியிட்டுள்ளது.

மேற்படி தகவலை 'இந்து' பத்திரிகை அலுவலக நிருபர் வளியிட்டுள்ளார். [கி]

# மரண அறிவித்தல்

## செல்வி ந. நாகேஸ்வரி

செல்வி ந நாகேஸ்வரி காலமானர். இவர் இளைப்பாறிய ஆசிரியர் நா. சி. நடராசா அன்னமுத்து, தம்பதியினரின் புதல்வியும், நாகேஸ்வரன் (கச்சேரி, கிளிநொச்சி), நாகேந்திரன், நாகபூசணி, நாகராணி, நாகநாதன் (கனடா), நாகராசன், நாகரஞ்சினி ஆகியோரின்சகோதரியும், கு. குலத்துங்கசேகரம் மு. சுகுமாரன், ஜெயந்தி, சற்குணராணி ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் (20-1-86) இன்று திங்கட்கிழமை நண்பகல் பன்னிரண்டுமணிக்கு கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

(C298) தகவல்: நா. சி. நடராசா

# மரண அறிவித்தல்

## திருமதி பவானி விசாகப்பெருமான்

நயினதீவு திருமதி பவானி விசாகப்பெருமான் காலமானர் இவர் இளைப்பாறிய தபால் அதிபர் விசாகப்பெருமானின் துணைவியும், காலஞ்சென்ற கிருஷ்ணமணி, கலாநிதி இராமச்சந்திரன் [நைஜீரியா, முன்னள் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்] அவர்களின் அன்புத் தாயாரும், Dr. கதிரேசு, புஙக்குடியிருப்பு, அம்பிகை ஆகியோரின் மாமியும், சந்திரகாந்தாவின் சிறிய தாயாரும், சுமித்திரா, பிரணதார்த்திகரன், கதிர்மணி, கிருஷ்ணமணி, சுரேஷ்கரன், அனுசூயா, சுமங்கலை ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். [C 297]

# மரண அறிவித்தல்

## திருமதி இராசம்மா முத்துக்குமாரு

திருமதி இராசம்மா முத்துக்குமாரு காலமானர். இவர், இளைப்பாறிய [O. A, G P O. Colombo] முத்துக்குமாருவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவராமலிங்கம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், திருமதிகள் இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, வாகீஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும், திருவாளர்கள் இராசரத்தினம் [அமெரிக்கா] யோகலிங்கம் [இளைப்பாறிய புகையிரத இன்ஜினியர்] குமரேசன் [ஆணையாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கொழும்பு] ஆகியோரின் மாமியாருமாவார் ஈமக்கிரியைகள் 20-1-86 திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் 106, கோவில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:

[CA 299] திரு. க. முத்துக்குமாரு

# உதைபந்தாட்டம்

## பொற்பதி சென். மேரிஸ் சாம்பியன்கள்

(யாழ்ப்பாணம்)

'யாழ் உதைபந்தாட்ட லீக்' விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திய, 7 பேர் பங்குபற்றிய லீக் போட்டியின் பரிசளிப்பு விழா நேற்று திருநெல்வேலி சிவகுமரன் மைதானத்தில் நடைபெற்றது.

'ஏ' பிரிவில் சாம்பியனுகை கொக்குவில் பொற்பதி ஐக்கிய சழகமும், 'பி' பிரிவில் சென் மேரிஸ் கழகமும் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டன

சாம்பியன் கோஷ்டிகளுக்கு யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டாக்டர் ஜே பி ஸி பிலிப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர்.

இப்பரிசளிப்பு விழாவை முன்னிட்டு நடைபெற்ற சண்காட்சி உதைபந்தாட்டப் போட்டியின் முதல் ஆட்டத்தில் சென் மேரிஸ் [நீலம்] கழகம் - கிறீன்பீல்ட் கழகத்தை 6 – 1 கோல்களால் வெற்றி பெற்றது இப்போட்டிக்கு உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு. ஆர். குணரட்ணம் அதிதியாகக் கலந்து கொண்டார். திரு எம். தேவதாஸ் மத்தியஸ்தம் வகித்தார்.

பொற்பதி ஐக்கிய கழகத்துக்கும் - சென். மேரிஸ் [வெள்ளை] கழகத்துக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டி வெற்றி-தோல்வியின்றி (3-3) முடிவடைந்தது இப்போட்டிக்கு திரு எஸ். எம். மாட்டீன் மத்தியஸ்தம் வகித்தார். [வி]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, [illegible] 24076.

# மட்டக்களப்பில் 200 பேர் கைது

[கொழும்பு]

மட்டக்களப்பில் இருதயபுரம், ஜெயந்திபுரம் பகுதிகளில் நேற்று ஆயுதப்படையினரால் சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டனர்.

அம்பாறையில் செருக்கலமுனை, வீரமுனைப் பகுதியிலும் சுமார் 200 பேர் ஆயுதப்படையினரால் நேற்று கைதுசெய்யப்பட்டனர். மன்னரிலும் நேற்றும் ஆயுதப்படையினரால் 20 பேர் கைதுசெய்யப்பட்டனர். [க]

# 19 பேர் மீட்கப்பட்டனர்

[கொழும்பு]

மன்னருக்கு அருகிலுள்ள கடலில் மூழ்கிக்கொண்டிருந்த படகொன்றிலிருந்து 19 பேரை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

இந்த 19 பேரும் படகொன்றில் இந்தியாவில் இருந்து இலங்கை நோக்கி வந்தவர்கள் என்றும் இவர்கள் அனைவரும் இலங்கைப் பிரஜைகள் என்றும் தெரியவருகிறது.

இவர்களில் ஒன்பது பேர் ஆண்கள், 6 பேர் பெண்கள் மற்றைய நால்வரும் குழந்தைகள் எனத் தெரியவருகிறது.

# ஆயுர்வேத வைத்தியர் தற்கொலை?

[வவனியா]

வவனியாவிலுள்ள சிங்களப் பகுதியில், சிங்கள ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் ஊர்காவல் படையினரின் துப்பாக்கியை பறித்து தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டார்!

வவனியா சிங்களப் பகுதியிலுள்ள இளமருதன் குளத்தில் இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org